விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (14.12.2004) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 361

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்படுகிறது

# விமானப் பறப்புக்கு புலிகள் தயார்

# இதனால் கடும் சீற்றமடைகிறது அரசு

## நோர்வேக்கும் க.குழுவுக்கும் அவசர கடிதம்

(நமது நிருபர்)

**இரண்டுக்கும் மேற்பட்ட விமானங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தம்வசம் வைத்துள்ளனர் என்பதை உறுதிசெய்துள்ள அரசாங்கம், விமான ஓடுபாதைகளை அமைத்து அந்த விமானங்களை பறப்பில் ஈடுபடுத்த புலிகள் தயாராகி வருவதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து கடும் சீற்றம் அடைந்துள்ளது.**

**இது தொடர்பாக அவசர கடிதம் ஒன்றை நோர்வேக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது.**

வான் புலிகள் விவகாரம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொடுத்துள்ள பிந்திய தகவல்களால் நோர்வே மீதும் கண்காணிப்புக்குழு மீதும் சிறிலங்கா அரசு கடும் சீற்றம் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இனி பறப்புக்களை மேற்கொள்வதில்லை என்று அரசு முடிவெடுத்தது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரணைமடுக்குளத்துக்கு அருகில் புலிகளின் விமான ஓடுபாதை அமைக்கப்பட்டு வருவதாக நீண்ட காலமாகவே தகவல்கள் வெளியிட்டு வந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஓடுபாதைக்குத் தென்மேற்குப் பக்கமாக விமானங்கள் பாதுகாப்பாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**பொருத்தமான அரச துறைகளில் வேலையற்ற பட்டதாரிகளை ஆட் சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப் பட்ட முன்றாம் தொகுதிப் பட்டதாரிகளின் பெயர், விபரம் உள்ளே...**

## சுத்திகரிப்புத் தொழிலாளர் போராட்டம் முடிவுக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசாவுக்கும், சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்குமிடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச் சந்திப்பின்போது சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக மாநகர ஆணையாளர் உறுதியளித்ததையடுத்து நேற்று நண்பகல் 12 மணிக்கு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய கடற்படை இன்று..

(கொழும்பு)

இலங்கை இந்திய கடற்படையினர் இன்று கூட்டுப்பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இப் பயிற்சி நடவடிக்கை நான்கு தினங்களுக்கு தொடரவுள்ளது. இப் பயிற்சி நடவடிக்கையில் போர் தாக்குதல் கப்பல்கள், அதிவேக தாக்குதல் படகுகள், உலங்கு வானூர்திகள் என்பன ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்திய கடற்படைத் தளபதி இப் பயிற்சி நடவடிக்கையை பார்வையிட உள்ளார்.

(த)

# முகமாலையில் கோர விபத்து இருவர் ஸ்தலத்தில் பலி

முகமாலையில் நேற்றுப் பிற்பகல் 4.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் ஸ்தலத்தில் பலியாகினர்.

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிவந்த மினிவானும் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின.

இராணுவத்தினரால் லொறிகளில் வரும் பொதிகள் சோதனை செய்யும் இடத்திற்கு அண்மையிலேயே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த தெல்லிப்பழையைச் சேர்ந்த சாம்பசிவம் ராகுலதரன் (வயது 26) நுவரேலியாவைச் சேர்ந்த நாராயணசாமி ராதாகிருஷ்ணன் (வயது 39) ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

இருவரினதும் சடலங்கள் கொடிகாமம் பொலிஸாரால் எடுத்துவரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-4)

## இலங்கை இராணுவத்தினரின்

# அன்ரனோவ் விமானங்கள் 2 ரஷ்யாவில் தடுத்து வைப்பு

உரிய ஆவணங்களோ முன் அனுமதியோ இன்றி ரஷ்ய விமான நிலையமொன்றில் அவசரமாகத் தரையிறங்கிய இலங்கை விமானப்படையின் அன்ரனோவ் ரக விமானங்கள் இரண்டு ரஷ்ய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்த மாலுமிகள் உட்பட 12 சிப்பந்திகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவித்து விமானங்களை மீட்பதற்கான இராஜதந்திர முயற்சிகளை அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது.

உக்ரெய்னில் உள்ள விமானம் பழுது பார்க்கும் கம்பனி ஒன்றில் விமானத்தைச் சீராக்கும் வேலைக்காகச்சென்ற இந்த இரு விமானங்களும் பணியை முடித்துவிட்டு நாடு திரும்பிக்கொண்டிருக்கையில் எரிபொருள் நிரப்புவதற்காக உஸ்பெகிஸ்தான் விமான நிலையமொன்றில் தரையிறங்க முயற்சித்துள்ளன.

ஆனால் தம்மிடம் தரையிறங்குவதற்கான முன் அனுமதியைக் குறிப்பிட்ட விமானங்கள் பெறவில்லை என்றும் அவற்றை அருகிலுள்ள ரஷ்ய விமான நிலையமொன்றில் தரையிறங்குமாறும் உஸ்பெகிஸ்தான் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சொற்ப எரிபொருளுடன், குறிப்பிட்ட ரஷ்ய விமான நிலையத்தில் தரையிறங்கிய இரு விமானங்களினதும் விமானிகள் மற்றும் அதிகாரிகளிடம் அந்நாட்டு விஸா உட்பட எந்த ஆவணங்களும் இல்லாததால் அவர்களை விமானத்தை விட்டு கீழிறங்க ரஷ்ய விமான நிலைய அதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று நடைபெற்ற மூதறிஞர் சொக்கனின் இறுதிக்கிரியை நிகழ்வின்போது ஆறு. திருமுருகன் தலைமை தாங்கி அஞ்சலியுரையினை நிகழ்த்துவதை படத்தில் காணலாம்.

# பாராளுமன்றில் தகாத வார்த்தைப் பிரயோகம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆவேசம்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் இராசம்பந்தன் கடந்த சனிக்கிழமை உரையாற்றிக் கொண்டிருந்தபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனால் சபை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிதியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய இரா.சம்பந்தன், ஈ.பி.டி.பி.யினர் கடந்த காலங்களில் மேற்கொண்ட வன்முறைகள் மற்றும் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மாவட்ட ரீதியாக அவர்கள் பெற்ற வாக்கு விகிதாசாரங்களை புள்ளிவிபரங்களின் அடிப்படையில் சுட்டிக்காட்டினார்.

அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்ய முற்பட்டவேளை வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அந்தவேளை, குழுக்களின் பிரதித்தலைவர் எம்.சச்சிதானந்தன் சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார்.

அமைதி காக்குமாறும் சம்பந்தன் எம்.பிக்கு உரையாற்ற இடமளிக்குமாறும் குழுக்களின் பிரதித்தலைவர் பல தடவை அமைச்சர் டக்ளஸிடமும் கூட்டமைப்பு எம்.பிக்களிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனாலும் வாய்த்தர்க்கம் ஓயவில்லை. ஜே.வி.பி.பாராளுமன்ற அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஆதரவாக குரல்கொடுத்தனர்.

இதனையடுத்துத் தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சபை நடுவாக சபாநாயகர் ஆசனத்திற்கு முன்வந்து அந்தத் துரோகியை சபையைவிட்டு வெளியேற்றுமாறு சத்தமிட்டார்.

அதேவேளை, சிவாஜிலிங்கம் எம்.பி.சபைக்குக் குறுக்காகச் சென்று அமைச்சர் டக்ளஸை தாக்க முற்பட்டபோது உதவிப் படைக்கலச் சேவிதர் சிவாஜிலிங்கம எம்.பியை கட்டிப் பிடித்து இழுத்துச்சென்று அவரது ஆசனத்தில் இருத்தினர்.

சிவாஜிலிங்கம் எம்.பி.தாக்க முற்பட்டபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தனது வேட்டியை மடித்துக்கொண்டு சபைக்கு நடுவே வரமுறபடடார். அந்தவேளை பிரதி அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பா அவரை விலக்குப்பிடித்து சமாதானப்படுத்தினார்.

ரவிராஜ் எம்.பி:யை சிவநேசன எம்.பி.சமாதானப்படுத்தி அவரை அவரது ஆசனத்திலிருந்து எழும்பவிடாது தாங்கிப் பிடித்துகொண்டிருந்தார். பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தகாத வார்த்தைகளைக்கேட்டு ஆத்திரமடைந்த சிவநேசன் எம்.பி.ஆசனத்திற்கு முன்புாக வந்து தமிழ் இனத் துரோகிஎன முழங்கினார். அது வரையும் அமைதியாக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்பியும கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அமைசர் டக்ளஸ் தேவானந்தாவை கடுமையாக ஏசினார்கள்.

கூட்டமைப்பினரின் ஆசனங்களுக்கு முன்பாக உதவி படைகல சேவிதர்கள் நின்று கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் அமைச்சா டக்ளஸ் தேவானந்தா அமைதியாக ஆசனத்தில் அமர்ந்துகொண்டதும், ஜே.வி.பி. உறுப் பினர்கள் கூட்டமைப்பு உறுப்பினர்களைப் பார்த்து புலிகளோடு தொடர்புபடுத்தி ஏசிக் கொண்டிருந்தனர். அதனால் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மேலும் ஆத்திரமடைந்து சத்தமிட்டனர்.

நிலைமையை சமாளிக்க முடியாத நிலையில் குழுக்களின் பிரதித்தலைவர் சபையை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். பின்னர் 2.05மணியளவில் சபை கூடியது. அப்போது சபைக்கு உபசபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தன தலைமை தாங்கினார். சம்பந்தன எம்.பி. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விமர்சித்த வண்ணம் உரையாற்றினார். (க-4)

## திருவெம்பாவை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி நுழைவாயில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள திருவெம்பாவை பூசைகள் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுளளன. அதேவேளை அதிகாலை திருவெம்பா பஜனை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (க-126)

## அடிக்கல் நாட்டுவிழா

(கல்வயல்)

சாவகசேரி கல்வயல் டீனேஜ் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கல்வயல் ஐக்கிய நாணயச் சங்கத்தினரால அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான் அடிக்கல்லை, முன்பள்ளித் தலைவர் இரவிகரன் நாட்டினார். (க-36)

# ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் விஷேட பணியாற்றும் ம.உ.குழுக்கள்

## திலக் ரணவிராஜ புகழாரம்

(கொழும்பு)

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் மனித உரிமைக்குழுக்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன என்று நீதியமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் மறறும் ஜனநாயக நடைமுறைகள் எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் சிறந்த முறையில் முன்னெடுத்துச்செல்லப்படும் என அவர் நமபிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையும் உளஞர் தேர்தல கண்காணிப்பு அமைப்பான ப.ஃவ்ரலின் 15ஆம் ஆண்டு பூர்த்தியையும் குறிக்கும் முகமாக நேற்று முன்தினம் காலை கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்சிகுவரும் அரசாங்கங்கள் பாரபட்சமின்றி நடந்து, சட்டத்தைப் பேணும் உன்னத சமுதாயம் ஒன்றை உருவாக்குவதறகு உதவ வேண்டும் எனவும் அவ் மேலும் தெரிவித்தர். (ற-4)

# கொழும்பு இசை நிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு

## குறித்த பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள்

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி இரவு இந்திய கலைஞர்கள் நடத்திய கலை நிகழ்சியில் இடம்பெற்ற கைக்குண்டுதாக்குதல் சம்பவம் தொடாபாக ஜனாதிபதி உட்பட பல்வேறு தரப்பினரும் மாறு பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் மாத்தறையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

கோட்டேயிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவரொருவரே இதன் சூத்திரதாரி எனத் தெரிவித்தார்.

இது ஒரு சதி நடவடிக்கையாகும். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு தற்போது இடத்துக்கு இடம் குண்டு போட முடியாமல் இருக்கின்றது. இதன் காரணமாகவே இந்த வேலையை சிலா பொறுபபேற்றுள்ளார்கள் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இந்த சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

தமது ஆட்சிக் காலத்தில் கொழும்பில் இத்தகைய பாரிய சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதாக இலலை. கடந்த 11ஆம் திகதி இரவு இடம்பெற்ற சம்பவமானது தலைநகர் கொழும்பின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகும். இதற்கான பொறுப்பை அரசாங்கம் தான் ஏற்க வேண்டும். ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் நடைபெற்றிருந்தும் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறிவிட்டது எனக் குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினா வண அத்துரலியே ரத்ன தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைச் சம்பவங்களுடன் தமது கட்சி தொடாபுபடுத்தப்படுவதை அவர் முற்றாக நிராகரித்தார்.

இந்தச் சம்பவமானது நாட்டிற்கும் பௌத்தத்திற்கும் அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதியாகும். இதிலிருந்து அரசாங்கம் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற வன்முறைகளைப் பொறுத்தவரை உணாச்சி மேலீட்டினால் இடம் பெற்றுள்ளது.

உண்ணாவிரதம் இருந்த பிக்குமார்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்குமிடையில் சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கணப்பட்டது. உண்ணாவிரதம் கைவிடப்பட்டதை ஏற்காத தரப்பினா தான வன்முறைகளில் ஈடுபட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

உல்லாசப் பயணத்துறை பிரதி அமைச்சர் அஜுன ரணதுங்க அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி குண்டு வெடிப்புச் சம்பவமானது எதிர்காலத்தில் இலங்கைக்கு உல்லாச பயணிகள் வருகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

சட்டம், ஒழுங்கு, பொது மக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து முழுமையாக திருப்தியடைய முடியாது. தனியாா பாதுகாப்புப் பிரிவினரே பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனா. அவர்கள் பொதிகளை சோதனையிட்டு உள்ளே செல்ல அனுமதித்திருந்தாலும் 25 ஆயிரம் பேரையும் சோதனையிட்டு உள்ளே செல்ல அனுமதிப்பதில் சில நடைமுறைச் சிக்கலை எதிாநோக்கியிருக்கலாம் எனக் கூறினார்.

இதற்கிடையில் ஹிந்தி திரைப்பட நடிகர் ஷாருக்கான் சர்வதேச ஊடகமொன்றிற்குக் கருத்து வெளியிடுகையில்,

இந்த சம்பவம் எனது முதலாவது அனுபவம். இனிமேல் இலங்கைக்குச் செல்லும் நோக்கம் எதுவும் எனக்கு இல்லை எனத் தெரிவித்திருநதார். (ற-4)

# உதைபந்தாட்டத்தில் யங் ஹென்றிஸ் சம்பியன்

(சுண்டுக்குளி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினால் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நெல்லியடி மததிய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் இளவாலை யங் ஹென்றஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென்அன்ரனீஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப்பெற்று சமனிலையில் இருந்ததனால் வெற்றிதோல்வியை நிர்ணயிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 மேலதிக உதைகள் வழங்கபபட்டது. யங் ஹெனறிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணததை தனதாக்கிக்கொண்டது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஆர்.றஜனிகாந, பி.கருணாநந்தன், பி.சசிவர்ணன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் எஸ்.மாதுளன் கலந்து கொண்டார். (7-110)

# எந்தவொரு இனத்தையும் ஆளவேண்டுமென முஸ்லிம்கள் ஒருபோதும் நினைத்ததில்லை

## அமைச்சர் அமீர் அலி தெரிவிப்பு

முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமென்றோ அல்லது தனி அலகு தேவை என்றோ வலியுறுத்தவில்லை. ஆனால் அவர்களது தாயகத்தில் முழுமையான உரிமைகளும் கௌரவமும் பெற்று வாழவேண்டும் என்று தான் விரும்புகின்றார்கள் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் அமீர்அலி கூறியுள்ளார்.

நேறறு முன்தினம் வாழைச்சேனை பரதேசத்தில் நடைபெற்ற மூத்த விவசாயிகள் கௌரவிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முஸ்லிம்கள் எந்த இனத்தையோ சமூகத்தையோ ஆள வேண்டும் என்று விரும்பியவர்கள் அல்ல.

இனப் பிரச்சினைக்கான தீர்வொன்று எட்டப்படும் போது முஸ்லிம்களின் கோரிக்கைகளும் அபிலாசைகளும் உள்வாங்கப்பட வேண்டும். இல்லையேல் அது நிரந்தரத் தீர்வாக அமையாது

சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவாக ஆரம்பிக்கபபட்டு சமாதானம் ஏற்பட வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது போல் முஸ்லிம்களும் எதிர்பாாக்கின்றாாகள் என்றும் குறிப்பிட்டார். (ற-4)

## பேராசிரியர் பீற்றர்சாட்டின் தொடர் விரிவுரை

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் சுவீடன் பல்கலைக்கழக பேராசிரியர் பீற்றர்சாட் வழங்கிவரும் தொடா விரிவுரை இன்றும் நாளையும் பி.ப.3.00மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்வில் 'வேதத்தின் தோற்றத்தின் புதிய கண்டுபிடிப்புகள்' எனும் விடயம் பற்றி பேராசிரியர் பீற்றர்சாட் விரிவுரை வழங்கவுள்ளதுடன், பேராசிரியர் ஞானகுமாரன் தலைமையில நடைபெறவுள்ள நாளைய நிகழ்வில் 'மதங்களின கொள்கைகள் பற்றிய புதிய விளக்கங்கள்' எனும் விடயம் குறித்து துவரிவுரை வழங்கவுள்ளார். (ற)

# கொழும்பு கைக்குண்டுத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

## ஒமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

இந்திய கலைஞர்களின் கலை நிகழ்ச்சியில் இடமபெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு தேவையான பாதுகாப்பு வழங்காத காரணத்தினாலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி ஹிந்தி நடிகர்களின் கலை நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் முன்னணி தலைநகர் கொழும்பில் பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற-4)

# "சம்பியன் கிண்ண ஹொக்கி" ஸ்பெயின் அணி சம்பியனானது

பாகிஸ்தான் லாகூரில் நடைபெற்ற ஆறு நாடுகள் கலந்து கொண்ட சம்பியன் கிண்ண ஹொக்கிப்போட்டியில் ஸ்பெயின் அணி முதன்முதலாக கிண்ணத்தை வென்றுள்ளது. இதன் மூன்றாவது

முறையாகவும் பட்டத்தை வெல்ல வேண்டுமென்ற ஹோலந்தின் கனவு வீணாகியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தற்போதைய சம்பியனான ஹோலந்தும் ஸ்பெயினும் மோதின. ஹோலந்து எளிதாக வெற்றிபெறும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் ஸ்பெயின் வெற்றிபெற்றது.

போட்டியின் முதற்பாதியில் 1:0 என்ற கோல் அடிப்படையில் ஸ்பெயின் முன்னணியில் இருந்தது. அதற்கான கோலை போல் குயிமோதா அடித்தார். இரண்டாவது பாதியில் ஹோலந்து சிறப்பாக ஆடும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் 43ஆவது நிமிடத்திலேயே அதன் சார்பில் டெங்கா டெய்காமா ஒரு கோலை அடித்தார்.

அதன்பின் ஸ்பெயின் சார்பில் இவ்வாண்டின் சிறந்த இளம் வீரர் என்ற வரிருது வென்ற சான்டியா கோபரிசூக்சாவும், விக்டர் சோஜாவும் 51வது, மற்றும் 57 வது நிமிடங்களில் தலா ஒரு கோலை அடித்தனர். 61 ஆவது நிமிடத்தில் ஹோலந்து வீரர் காரல் கிளவர் தமது அணி சார்பில் இரண்டாவது கோலை அடித்தார். இறுதியாக பரிசூக்கா மேலும் ஒரு கோலை 62 ஆவது நிமிடத்தில் அடிக்க ஸ்பெயின் அணி 4:2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

கடந்த 13போட்டிகளில் எந்தப் பதக்கத்தையும் பெறாத ஸ்பெயின், முதன்முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றது. வெள்ளிப் பதக்கத்தை ஹோலந்தும் வெண்கலப்பதக்கத்தை பாகிஸ்தானும் வென்றன. 4 ஆம் இடம் இந்தியாவுக்கும் 5 ஆம் இடம் ஜேர்மனிக்கும் கிடைத்தன. (7)

# பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் இந்தியாவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று முடிவடைந்த இந்

திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது கிரிக்கெற் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

கடந்த வெள்ளியன்று ஆரம்பமான இப்போட்டியில் பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸ்- 184, இந்தியா முதல் இன்னிங்ஸ்- 526 சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காது 248 ஓட்டங்கள் பெற்றார். இது அவர் டெஸ்ட் போட்டிகளில் பெற்ற அதிக ஓட்டமாகும். பங்களாதேஷ் சார்பில் பாஷ்யா, மொர்ராசா, ரஹ்மான், ரபீக் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் அஸ்ரபுல் ஒரு விக்கெற்றறையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் 8 விக்கெற்றுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடர்ந்தபோது நவீஸ் இக்பால் 54 ஓட்டங்களையும் மஞ்சூரல்ரானா 69 ஓட்டங்களையும், பாஷ்யா 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி சார்பில் பந்துவீச்சில் இர்பான்பதன் மிகச் சிறப்பாகப் பந்துவீசி 51 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்

றுக்களை வீழ்த்தினார். கும்ளே 2 விக்கெற்றுக்களையும், சஹீர்கான், ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர். (து-7)

# சஹீர்கான் உலக சாதனை

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சஹீர்கான் உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்.

11 ஆவது வீரராக களமிறங்கிய சஹீர்கான் 115 பந்துகளை எதிர்கொண்டு 75 ஓட்டங்களைக் குவித்தார். அதில் 2 சிக்ஸர்களும் 8 பவுண்டரிகளும் அடங்கும். 11ஆவது ஆட்டக்காரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டமாக சஹீர் பெற்ற 75 ஓட்டம் அமைந்தது.

இதற்குமுன் 1972-73 காலப் பகுதியில் ஒக்லன்டில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து வீரர் றிச்சர்ட் கைட்லி 68 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காதிருந்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

அத்துடன் 10ஆவது விக்கெற்றுக்காக சச்சினுடன் இணைந்து 133 ஓட்டங்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் 1952 பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் குலாம் அஹமட் ஹேமு அதிகாரி இருவரும் 109 ஓட்டங்களைப் பெற்றமையோ அதிக எண்ணிக்கையாக இருந்தது.

# விளையாட்டு செய்திகள்

# அரசதுறை வேலைவாய்ப்புக்காக தெரிவான மூன்றாம்கட்ட பட்டதாரிகளின் பெயர் விபரம் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

அரசதுறை வேலைவாய்ப்புக்களில் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்காக மூன்றாம்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

அரசதுறை வேலைவாய்ப்புக்காக மூன்றாம்கட்டமாக நாடளாவிய ரீதியில் 968 பட்டதாரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதற்கென யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 57 பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதலாம், இரண்டாம் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து பட்டதாரிகளுடன் மூன்றாம் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இப் பட்டதாரிகளும் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு ஏற்றவாறு எதிர்வரும் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதற்குரிய நடவடிக்கைகளை நிதி, திட்டமிடல் அமைச்சு மேற்கொண்டுவருகிறது.

மூன்றாம் கட்டமாக நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பட்டதாரிகளின் விபரம் வருமாறு,

என்.கெங்காதரன் (நயினாதீவு), வி.நிஷாந்தன் (ஆனைப்பந்தி), எஸ்.லட்சுமிகாந்த (யாழப்பாணம்), கே.செந்தில்நே (அரியாலை), எஸ்.பிறேம்கும (யாழ்ப்பாணம்), எஸ்.மூர்த்தி (யாழ்ப்பாணம்),

எஸ்.சற்.டி.கொஸ்ரன்ரைன் (கொக்குவில்), என்.தர்மினி (நல்லூர்), ரி.றஜனி (நல்லூர்), ரி.தேவானந்த் (நல்லூர்), ரி.வானதி (யாழ்ப்பாணம்), ரி.செல்வமனோகரன் (திருநெல்வேலி), ஏ.சந்தினி கேதன்(புலோலி),

ரி.ஜேசுதாஸ் (கல்கிசை), எஸ்.ஜெயந்தி (சுன்னாகம்), என்.ஆனந்த மகேஸ்வரன்(உடுவில்), ஆர்.கந்தசாமி (கந்தரோடை), கே.ரவிச்சந்திரன் (மாதகல்), பி.கேசினி (சித்தன்கேணி),

எஸ்.திருக்குமரன் (சித்தன்கேணி), எம்.சிவமலர் (நல்லூர்), ஜே.தனேஸ்வரன் (கோண்டாவில்), எம்.பிரதீபன் (கோப்பாய்), பி.ரவீந்திரா (கொக்குவில்), கே.கஜன் (சுன்னாகம்),

ஆர்.ரமேஷ்குமார் (கந்தரோடை), ஜி.சசிகுமார் (சுன்னாகம்), எஸ்.ஹரிகரன் (சுன்னாகம்), எல்.வைத்தீஸ்வரி (கொக்குவில்), எஸ்.தர்ஜினி (மயிலணி),

டி.ஞானறோஜினி (சுன்னாகம்), ஆர்.ஜெயகுமாரன்(இணுவில்), ஆர்.சத்னேஸ்வரன் (சுன்னாகம்), ஏ.கிருஷ்ணன்(சுன்னாகம்), பி.தணராஜன்(சுன்னாகம்), எஸ்.செலவாஜினி (இணுவில்),

ரி.சுவேந்திரராஜா(சுண்டுக்குளி) வி.கேசவன்(கந்தர்மடம்), ஜி.தெய்வேந்திரம்(உடுப்பிட்டி), எம்.பத்மநாதன் (மானிப்பாய்),

பி.பிரபா (மானிப்பாய்), கே.உமாசங்கர் (பருத்தித்துறை), ஆர்.சடாஸ்கரா (தாவடி), பி.குணராஜா(சுன்னாகம்), பி.சுகந்தினி (நீர்வேலி), எஸ்.சிவஞானசேகரம் (யாழ்ப்பாணம்),

எஸ்.விக்னமோகன் (சுன்னாகம்), வி.எம்.எம்.பத்மலால் (ஆனைக்கோட்டை), எஸ்.ஆர்.ரஞ்சிதராஜ் (இளவாலை), எஸ்.செந்தூரன் (யாழ்ப்பாணம்), கே.ஜெயசேகரா (தெல்லிப்பழை கிழக்கு), என்.வைகுந்தன் (மானிப்பாய்), எஸ்.பானுமதி தெல்லிப்பழை, ஏ.டி.கொன்ஸ்ரன்ரைன் (பண்டத்தரிப்பு)

எஸ்.மதனகாமராஜா (இளவாலை),ஜே.ரர்சமதி (இணுவில்), ரி.குமாரதாஸ் (சுன்னாகம்). (ற)

## இடுப்பளவு வெள்ளம்

(துன்னாலை)

துன்னாலை குடவத்தைப் பகுதியிலுள்ள பிட்டுத்தூ மயானம் வெளளத்தால் சூழப்பட்டுள்ளதுடன், மயானத்திற்கு செல்லும் வீதி வெள்ளத்தால் நிரம்பியுள்ளது.

வெள்ளம் இடுப்பளவு உயரத்திற்கு தேங்கி இருப்பதால் இறுதிக்கிரிகைக்கு சடலத்தை கொண்டு செல்வோர் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் தமது பணியைச் செய்ய வேண்டியுள்ளது. (ப-101)

## இளைஞர் தற்கொலை

(துன்னாலை)

பிரான்ஸ் நாட்டிற்கு வேலை தேடிச்சென்ற உடுப்பிட்டி நாவலடி இளைஞர் ஒருவர் அண்மையில் தற்கொலை செய்துகொண்டார்.

சின்னப்பு ரமேஷ் என்னும் 25 வயதுடைய மேற்படி இளைஞர் அங்கு பணிபுரியும் காலத்தில் உளப்பாதிப்புக்குள்ளாகிய நிலையில் சென்றமாதம் 14 ஆம் திகதி தனதறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டதாகவும் அவரது சடலம் சொந்தநாட்டிற்கு கடந்த 10 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.(ப-101)

# பிராந்திய மட்ட மே.மு.நீதிமன்றங்களால் காணி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

பிராந்திய மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்படுவதைத் தொடர்ந்து, காணிப்பிரச்சினை தொடர்பாக வழக்குகளின் விசாரணைகளில் இருந்து வரும் தாமதத்தைக் குறைக்க முடியுமென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

காணிப்பிரச்சினை சம்பந்தமான வழக்குகளின் விசாரணைகள் பத்து வருடங்களுக்குமேலாக நீடிப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மேன்முறையீட்டு வழக்குகளின் விசாரணைகள் அனைத்தையும் கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றமே தற்போது மேற்கொண்டு வருகிறது. ஐந்து மாகாணங்களில் அமைக்கப்படவிருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மூலம் நீதித்துறை நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டபின் சிவில் வழக்குகளை துரிதமாக விசாரணை செய்யமுடியு மென்றும், காணிப் பிரச்சினை தொடர்பான வழக்குகளின் தீர்ப்புகளை விரைவாக வழங்கமுடியுமென்றும் பிரதம நீதியரசர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் ஒன்பதாயிரத்துக்கும் மேற்பட்ட சிவில் வழக்குகள், மற்றும் காணி சம்பந்தமான வழக்குகள் விசாரணைக்காக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# நேபாளத்தில் இடம்பெற்ற மோதலில் மாவோயிஸ்டுகள் உட்பட 21 பேர் பலி

நேபாள நாட்டில் இராணுவத்திற்கும், அரசுக்கும் எதிராகப் போராடிவரும் மாவோயிஸ்டுகளுக்கும் நடந்த கடும துப பாக்கிச் சண்டையில் 19மாவோயிஸ்டுகள உட்பட 21பேர் கொல்லப்பட்டனர்.

காத்மண்டுவிலிருந்து வடகிழக்கில 100 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ராமே சாப்பி மாவட்டத்தில் இந்த மோதல் நடந்த தாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்கு தலில் 8 வயது சிறுமியும, ஒரு காவலரும் கொல்லப்பட்டத்தாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேபாள நாட்டில் அர சுக்கு எதிரான கிளர்ச்சி நடவடிக்கைக ளில் ஈடுபட்டுவரும் மாவோயிஸ்ட் தீவிர வாதிகளின் செயற்பாடுகளால் ஏராள மானோர் கடத்தப்பட்டும், படுகொலை செயயப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறான மாவோயிஸ்ட்டுகளை ஒடுக்குவதற்காக கடுமையான நடவடிக் கைகளை அந்நாட்டு அரசு முடுக்கிவிட் டுள்ளது.

அரசின் உத்தரவுப்படி இராணுவத் தினர் மேற்கொண்டு வரும் தீவிரவாத ஒழி ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மாவோ யிஸ்ட்டுகளும் போராடிவருகின்றனர்.

இதனால் தற்போது இராணுவத்தி னர்க்கும் தீவிரவாதிகளுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றுவருகின் றன.

இம்மோதல்களில் தீவிரவாதிகள் மட்டுமன்றி பொதுமக்களும் நேபாள இராணுவத்தினரும் உயிரிழந்து வருகின் றனர்.

இது இவ்வாறு இருக்க நேபாளத் தின் முக்கிய நகரங்கள், அரச கட்டடங் கள் மீது தாக்குதல்களை நடத்த மாவோ யிஸ்ட்டுகள் திட்டமிட்டிருப்பதாகத் தக வல்கள் வெளியாகியுள்ளன. (ப)

அமெரிக்காவின் வோஷிங்டனில் உளள நேஷனல் பல்டிங் மியூசியத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காகச் செல் லும் அந்நாட்டு அதிபர் ஜோர்ஜ் புஷ் அவரது மனைவி லாராவுடன்.

இனிய இசைநாத தெய்வீக உரு வம் எவ்வித ஸ்ருதியும் இல்லா மல் நிசப்தமானது.

அரசு சார்பில் குண்டுகள் முழங்க சுப்புலட்சுமி உடலுக்கு சென்னை பெசன்ட் நகர் சுடுகாட் டில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

# ஈராக்கிற்கு மேதிக துருப்புகளை அனுப்புவதற்கு அமெரிக்கா திட்டம்

ஈராக்கில் நடைபெறவுள்ள தேர் தலை முன்னிட்டு அங்கு மேலும் 12,000 இராணுவ வீரர்களை அனுப்பத் திட்டமிட டுள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறி யுள்ளார்.

ஈராக்கில் பணியாற்றிவிட்டுத் திரும் பிய அமெரிக்க வீரர்களிடையே தெற்கு கலி .ர்போர்னியாவில் உள்ள பெண்டில் டன் முகாமில் நடந்த விழாவில் அவர்க ளைப் ப்ராராட்டிப் பேசிய அதிபர் புஷ், ஈராக் கில் அமெரிக்காவின் படைபலம் ஒன்றரை லட்சமாக உயர்த்தப்படும் என்று கூறினார்.

தோதல் நெருங்க நெருங்க அதனை சீர்குலைக்க நினைக்கும் தீவிரவாதிக ளின் தாக்குதல்கள் அதிகரிக்கும் என்று எச்சரித்த அதிபர் புஷ், ஈராக்கில் ஜனநாய கத்தை ஏற்படுத்த அமெரிக்கப்படையினர் புரிந்துவரும் சேவை பெருமைப் படத்தக் கது என்று கூறினார்.

அமெரிக்காவின் கடற்படையைச் சேர்ந்த 21,000 படை வீரர்கள் தான் பலூ ஜாவில் வீட்டிற்கு வீடு சோதனை நடத்தி ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள் என் பது குறிப்பிடத்தக்கது.

2003ஆம் அண்டு மார்ச் மாதம் அமெரிக்கப் படைகள் ஈராக்கிற்குள் நுழை ந்தது முதல் இதுவரை 1,200 வீரர்களை அமெரிக்கா இழந்துள்ளது. இவர்களில் 1,000 பேருக்கும் மேல் தீவிரவாதிகளின் கொரில்லாத் தாக்குதல்களில் உயிரி ழந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, ஈராக்கில் ஜனவரி மாதம் நடத்தப்படவிருக்கும் தேர்தலைப பிற்போடுமாறு பல்வேறு நாடுகளும் ஈராக் கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும், ஈராக் கின் இடைக்கால பிரதமர் ஜியான் அல ரியைத் தனித்தனியாகச் சந்தித்து கோரி வருகின்றனர். (ப)

பழநி கே.வி இருதய மருத்துவ மனையில் ஐஸ்வர்யா என்ற பெண் கருத்தரித் தல் மையம் மூலம் பெற்ற 14 குழந்தைகளுடன் டாக்டர் சந் திரலேகா உள்ளார்.

# ஜம்மு - காஷ்மீர் விவகாரம் குறித்து கலாம் - மன்மோகன் ஆராய்வு

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் ஜனாதிபதி அப் துல்கலாமைச் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெற்ற இச்சந்திப்பு 35நிமிடங்கள் நீடித் தது. இச்சந்திப்பின்போது தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச் சினைகள் குறித்து ஜனாதிபதி கலாமுடன மன்மோகன் சிங் ஆலோசனை நடத்தினார்.

பாராளுமன்றத்தின் குளிர்கால கூட்டுத்தொடர் குறித்தும், பாராளுமன்ற இரு சபைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டப்பூர்வ அலுவல் நடவடிக்கை கள் குறித்தும் ஜனாதிபதி கலாமிடம் பிர தமர் மன்மோகன்சிங் எடுத்துக்கூறினார்.

இந்தியா - ஐரோப்பிய யூனியன், இந் தியா - ஆசியான் ஆகிய உச்சி மாநாடுக ளில் தான் கலந்து கொண்டது குறித்த விப ரங்களை ஜனாதிபதி கலாமிடம் மன் மோகன் சிங் எடுத்துக்கூறினார்.

ஜம்மு - காஷ்மீர், வடகிழக்கு மாநி லங்களில் அண்மையில் தான் மேற் கொண்ட சுற்றுப்பயணம் குறித்தும், இந்த மாநிலங்களுக்கு ஜக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அறிவித்துள்ள பல்வேறு சலுகைகள் குறித்தும் ஜனாதிபதியிடம் மன்மோகன் சிங் விளக்கமாகக் கூறினார். (ப)

சீனாவிலுள்ள பீஜிங் நகரில் உலக அழகிப் போட்டி வருகிற 18ஆம் திகத நடைபெறவுள்ளது. இதில் சீனா சார் பில் பங்கேற்கும் வியூ சங்ஜின் ஒரு அரவாணியாவார். 3ஆண்டுகளுக்கு முன்பு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து பெண் ணாக மாறினாராம். இதனை நிருபர்க ளிடம தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

மும்பையில் நடந்த நேவிகியூன் அழகிப் போட்டியில் முதலிடம் வந்த சோனியா சூரி (நடுவில் இருப்பவர்)க்கு அடுத்த இடம் வந்த அழகிகள் முத்தமிட்டு வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# பாம்புக்கடியினால் ஏற்படும் மரணங்களைத் தடுக்க உடனடி முதலுதவி முக்கியமானது

## மருத்துவ விளக்கம்

எந்த ஒரு அவசர பாதிப்பிற்கும் உடனடியாக முதலுதவி கள் தேவைப்படுவது போல, பாம்பு கடிக்கும் முதலுதவி மிகவும் முக்கியமானதாகும்.

பாமபு கடித்தவுடன் ஓடினால ஏறிய விஷம் மிக விரைவாக

மேல் நோக்கி பரவும். எனவே, நோயாளி பயந்து ஓடக்கூடாது.

நாட்டு வைத்தியர்களுக்கு கடித்தது விஷப்பாம்பா, விஷ மற்ற பாம்பா என்பதைக் கண்டு பிடிக்கத் தெரியாது. எனவே எல்லாவற்றிற்கும் ஒரே மருந்தையே தருவார்கள். 'விஷப் பாம்பு' கடித்திருந்தால் நோயாளி பெரும்பாலும் இறந்துவிடுவார். எனவே அவர்களை நம்பி பிரயோசனம் இல்லை.

'சிவப்புக்கல் பாம்பின் விஷத்தை உறிஞ்சாது. எனவே இதுபோன்ற விஷப் பரீட்சைகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

பாம்பு கடித்தவுடன் விஷம் உடனடியாகவே பல்வேறு நாளங்கள் வழியாக இரத்த ஓட்டத்தை அடையும். எனவே, கடிபட்ட இடத்தில் கீறி இரத்தத்தை வெளியேற்றுவதால் குருதியை வெளியேற்ற முடியாது. கட்டு விரியன் போன்ற பாம்புகள் கடித்திருந்தால் ஏற்கெனவே அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அதோடு கடித்த இடத்தைக் கிறுவதால் மேலும் இரத்தப் போக்கு அதிகரிக்கும். எனவே இது போன்று கீறி இரத்தப் போக்கை அதிகரிக்கக் கூடாது.

நீண்ட காலமாக பாம்பு கடித்த இடத்தில் கீறி அந்த இடத்தை வாய்வைத்து இரத்தத்தை உறிஞ்சி வெளியே துப்பி விஷத்தை உட்பு காமல் தடுக்கிறேன் என்று முதலுதவி செய்து வந்தார்கள். ஆனால் இந்த முறை இப்போது கைவிடப்பட்டு விட்டது. பாம்பு கடித்த இடத்தில் கீறினால் அதிக இரத்தப் போக்கு ஏற்படும் என பார்த்தோம். அதோடு வாய் வைத்து இரத்தத்தைச் உறிஞ்சினால் அழுத்தத்தால் மேலும் இரத்தப் போக்கு அதிகமாகும். சிலருக்கு வாய்ப் பகுதி களில் புண்ணிருந்தால் உறிஞ் சும் இரத்தத்தில் உள்ள விஷம் முதலுதவி செய்பவரின் உடலி லும் நூழைந்து பாதிப்பை ஏற் படுத்தும். எனவே எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

### பாம்பு கடித்தவருக்கு உடனடியாகச் செய்யவேண்டியவை

பாம்பு கடித்த போது நோயாளிக்கு அருகில் யாராவது இருந்தால் கடித்த பாம்பை அடித்துக்கொண்டு வருவது அல்லது. இதனமூலம் அதி விஷம் உள்ள பாம்பா? அல்லது விஷம் அற்றதா என்பதைக் கண்டுபிடித்து விடலாம். விஷம் அற்ற பாம்பு என்றால் தேவையற்ற வீண் பயத்தை போக்குவதுடன், முதலுதவிகள், பிறசிகிச்சைகள் செய்தால் போதுமானது. நோயாளிக்குத் தையியமூட்டினாலே போதுமானது. தேவையற்ற விஷமுறிவு மருந்து' மற்றும் அதிநவீன சிகிச்சைகள் தேவைப் படாது, அவற்றைத் தவிர்த்து விடலாம்.

கடிபட்ட இடத்துக்கு மேலாக இரபபர், பட்டை கொண்டு கட்டினாலே போதும். அது விஷம் நிணநீர்க்குழாய் மூலமாக மேல் நோக்கிப் பரவுவதைத் தடுத்து நிறுத்தும். நைலோன் கயிறு, மிகவும் கடினமானவற்றைக் கட்டத்தேவையில்லை. இதனால், இரத்த ஓட்டம் கடிபட்ட பகுதிக்கு குறைந்து திசு நலிவு ஏற்படும். கடிபட்ட இடத்தில் கிருமிநாசினிகள் கொண்டு சுத்தம் செய்து அங்கு நுண்ணுயிர்க் கொல்லி மருந்தின் களிம்பு களைப்பூச வேண்டும்.

நோயாளிக்கு அவரவருக்குத தெரியும் சிகிச்சையை எல்லாம செய்யாமல் உடனடியாக நவீன சிகிச்சையுடைய மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

### 'பாம்புக் கடி ஏற்படாமல் எப்படித் தடுக்கலாம்'

'வருமுன் காப்போம்' என்ற தத்துவப்படி 'பாம்புக் கடி ஏற்படாமல' மக்கள் முன் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும். நமது நாட்டில் பாம்புக் கடியினால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் காடுகளில் வேலைசெய்பவர்கள், வயல் வெளியில் பணிபுரிபவர்கள் மற்றும் கிராமத்து மக்களே இதனால பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் பெரும் பாலான பாம்புக கடி மாலை, இரவு நேரங்களிலேயே ஏற்படுகின்றது. இன்றும் பார்த்தால், பல கிராமத்துக் காரர்களும், காலில் செருப்புக் கூட போடாமல் இருட்டு என்றும் பாராமல் விளக்கு எதுவும் இல்லாமல் அவர்கள் இரவில் பல இடங்களுக்கும் போய்க் கொண்டு இருப்பார்கள், இது ஆபத்தானது என்பதை அவர்கள்உணரவேண்டும்

எனவே, இரவு நேரங்களில் கைவிளக்கு இல்லாமல் இவர் கள் காட்டுப் பகுதிகளிலோ அல்லது வயல் வெளிகளிலோ நடக்கக் கூடாது.

இவவாறு சென்றாலே 'பாம்பு கடி' பாதிப்புகள் குறைந்து விடும். மேலும், இரவு நேரங்களில் இதுபோன்ற இடங்களில் நடக்கும் போது மெதுவாக மிகவும் கவனமாக வெளிச்சம் அடித்தபடி செல்லவேண்டும். ஏதாவது, பாம்பு நகரும் சரசரப்புக் கேட்டாலும் சற்று நின்று நிதானித்து, கவனித்துப் பார்த்து விட்டுச் செல்வது நல்லது. இரவு நேரங்களில் இவ்வாறு செல்கின்றவர்கள் பொலிஸ் காரர்கள் போடக்கூடிய நீண்ட சப்பாத்து அணிந்து கொண்டு செல்வது சிறந்தது. ஏனெனில் பாம்பு கடித்தால் கூட, பாம்பின் 'விஷப்பல் சப்பாத்தைத தாண்டிச் செல்லாது' இதனால் 'விஷம்' கால் வழியாக உலுக்குள் நுழைய வாய்ப்புகள் இல்லை. மேலும் சப்பாத்தின் மேற்பகுதி மூடியதாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

இரவு நேரங்களில் விவசாயிகள், வயல்வெளி மற்றும் செடி கொடி, மரம் ஆகிய இடங்களுக்குச் சென்று வேலை ஏதாவது செயயத் தொடங்குவதாக இருந்தால் 'கையுறைகள்' அணிந்து கொள்வது நல்லது, அதுவும் நல்ல தடிமனாக இருக்கவேண்டும். வெளிச்சத்தில் வேலை செய்வது நல்லது. ஏனென்றால் 'பாம்புகள்' மரம், செடி, கொடியுடன் சுற்றியிருந்தால் பார்த்து முன்எச்சரிக்கையாக இருக்கலாம். ஒருவேளை கவனிக்கத் தவறினாலும் 'கையுறை' 'உயிறுறையாக' மாறிவிடும். ஆமாம உயிரைக்காப்பாற்றும் உறையாக உதவும். ✻

டாக்டர்
முத்துச செல்லக்குமார்

## மரம் நடுகை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சூடியம் அமைப்பினால் குறிகட்டுவானில் இருந்து மடத்து வெளிவரையும் பிரதான வீதியோரமாக பயன் தரு மரங்கள் நடுகை செய்யப்பட்டு பாதுகாப்பான முறையில் வளர்க்கப் பட்டு வருகின்றன.

அதேவேளை, ஏனைய வீதிகளான இறுப்பிட்டி, ஊரதீவு, வலலன், வீராமலை, சங்கத்தாகேணி, குறிகட்டுவான் குறுக்கு வீதிபோன்ற பகுதிகளிலும் இவ்வாறு மரங்கள் நடுகை செய்யப்படவுளளதாக சூடிகம் அமைப்பின் ஆலோசகரும், மக்கள் சமூக அபிவிருத்திக் கழகத் தலைவருமான சு.கருணாகரன் தெரிவித்துள்ளார். (க-126)

## மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளது

(அம்பன்)

உவர் கடல நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் யாழ்.குடாநாட்டிற்கான கட்டுமானப் பணிகளுக்கு பயன்படும் மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

குறிப்பாக குடத்தனை மணற்பிரதேசத்தில் மணல் அள்ளப்படும் பகுதியில் 2 அடிக்கு மேல் நீர் தேங்கி நிற்பதால் மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது. (க-56)

## மத்தியஸ்தர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தா சம்மேளனம், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதி நடாத்த இருந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் ஜனவரி 7 ஆம திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.(க-110)

## நுளம்புகளின் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நுளம்புகள் அதிகரித்துள்ளது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

குறிப்பாக யாழ்.நகரை அண்டிய பகுதிகளிலும் இவ்வாறான தொல்லை அதிகரித்துள்ளது. (ப-74)

# பரு.பிரதேச செயலகத்தினால் திறமைசாலிகள் கௌரவிப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள திறமை சாலிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 8ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது விளையாட்டுத் துறையில் பெண்களுக்கான அனைத்துப் பொட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்ற செ.தயாளினிக்கு 'சகலதுறை விளையாட்டு வீரர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் உற்சவ காலத்தில் கட்டைப்பிரயைச் சேர்ந்த எஸ்.தனபாலசிகம் ஆலயச்சூழலில் பெறுமதமிக்க தங்க நகையைக் கண்டெடுத்துப் பருத்தித்துறை பிரதேச செயலக உற்சவகாலப் பணி மனையில் ஒப்படைத்தார். இவரும் இவ் நிகழ்வில் கௌரவிக்கப் பட்டார்.

தேசிய கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற பருத்தித்துறைப் பிரதேச கிராம அலுவலகர் கே.தயாநிதியும் தில் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் சமூக சேவை தொண்டர்களாகச் செயற்பட்டோரும் இந் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு தலா ஒவ்வொரு சைக்கிள்களும் அனபளிப்பாக வழங்கப்பட்டன. (ப-35)

# தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டுக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசியல் விவகாரம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சருக்கான நிதியொதுக்கீட்டுக் குழுநிலை விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

இவ்விவாதத்திற்கு ஆதரவாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டடைப்புடன், ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன வாக்களித்தன.

இதனால் இற்கு ஆதரவாக 106 வாக்குகள் கிடைத்தன.

இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் 22 வாக்குகள் அறிவிக்கப்பட்டன. இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை 84 மேலதிக வாக்குகளால் இந்த அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டது. (ற-4)

# ஜயலத் ஜயவர்தன மலேசியா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மனித உரிமைகள், நிவாரண சங்கத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத ஜயவர்தன நேற்று முன்தினம் மலேசியாவுக்குப் பயணமாகியுள்ளார்.

இதற்காக வைத்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தின் மூலம் ஜயலத்திற்கு நேரடியாக அழைப்பு விடுக்கப்பட்டது.

இவ்விஜயத்தின்போது ஆசியாவின் வைத்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பிரதிநிதி டெடோ பரம் குமாரசாமியைச் சந்திப்பதற்கும் மற்றும் சிங்கப்பூர் வெளிநாட்டு அமைச்சர் உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகளையும், சிங்கப்பூர் சுகாதார அமைச்சரையும் சந்திப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்த விஜயத்தின் போது இலங்கை நடைமுறை அரசியல் நிலவரம், குறிப்பாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமை மீறல்கள். அரசியல் பழிவாங்கல்கள் போன்றவை தொடர்பான விடயங்களை சிங்கப்பூர் மற்றும் மலேசியாவின் உயர் அதிகாரிகள் பலரைச் சந்தித்து உரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# வட-கிழக்கில் ஊடக சுதந்திரம் பேணப்பட வேண்டியது அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் அறிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஊடகத்துறைசார் நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் சக்தி தொலைக்காட்சியின் பரிவர்த்தனை நிலையம் மற்றும் மட்டக்களப்பு நகரில் தினக்குரல் பத்திரிகை அலுவலகம் ஆகியன மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் செய்திகளையும் கருத்துக்களையும் எடுத்துச் செல்லும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளும் பக்குவமும் ஜனநாயக மரபும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பேணப்படவேண்டும்.

அதேவேளை, ஊடகங்களும் தமது கடமையை உணர்ந்து, ஊடக தர்மத்தைப் பேணி, உண்மைத தன்மையினை பக்கச்சார்பின்றி எடுத்துக் கூற முற்படவேண்டும்.

ஊடகங்கள் மீதான இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இனிமேலும் தொடராமல் அவை நிறுத்தப்படுவதற்கு அனைத்துப் பொது அமைப்புக்களும், மக்களும் இணைந்து இதற்கெதிராகக் குரல் எழுப்ப முன்வரவேண்டும் என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இன்று ஒரு தகவல்

## இதயமும் மூளையும்

1816 ஆம் ஆண்டில் ஒருநாள் ஒரு பிரான்ஸ் நாட்டு டாக்டர் மருந்துவமனையிலிருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். அப்படி போய்க்கொண்டிருந்த போது தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந் தார்கள் எப்படி தெரியுமா? ஒரு மரத்துண்டு கிடந்தது. அதில் ஒரு முனையில் ஒரு சிறுவன் தட்டிக்கொண்டி ருந்தான்.

இன்னொரு முனையில் அந்த மரத்துண்டில் காதை வைத்து இன்னொரு சிறுவன் கேட்டுக்கொண்டிருந் தான். மறுபடியும் இவன் இந்த பக்கத்திலிருந்து தட்ட அதை அவன் அந்தப் பக்கத்திருந்து கேட்டான் இதைப் பார்த்தார் அந்த டாக்டர்.வீட்டுக்குப் போகாமல் திரும்பி மீண்டும் மருத்துவமனைக்கே சென்றார்.

ஒரு பெரிய கடதாசித்துண்டை எடுத்து குழாய் மாதிரி சுருட்டினார். அதன் ஒரு முனையை ஒரு நோயா ளியின் நெஞ்சில் வைத்தார் இன்னொரு முனையில் தனது காதை வைத்துக் கேட்டார். அந்த நோயாளியின் இதயத்துடிப்பு இவருக்குக் கேட்டது. அன்று அப்படி ஆரம்பித்தது தான் இன்று ஸ்டெதஸ்கோப்பாக மாறி வந்திருக்கிறது.

மனிதன் கருவில் உருவான நாளிலிருந்து கடைசி மூச்சு உள்ளவரை அவனது உடம்பில் ஓய்வில்லா மல் வேலை செய்வது இரண்டு. ஒன்று மூளை இன் னொன்று இதயம்.அப்படிப்பட்ட இதயத்தையே கொஞ்ச நேரதிற்கு வேலை செய்யாமல் நிறுத்தி வைத்துவிட்டு ஒரு அறுவைச் சிசிச்சை செய்திருக்கிறார்கள் சில மருத்துவர்கள்.

செத்துப் பிழைப்பது என்று சொல்வார்கள் அல் லவா அது நிஜமாகிவிட்டது இப்போது.ஒருவரை சாக வைத்துப் பிழைக்க வைத்திருக்கிறார்கள்.ஒரு பெண் நோயாளிக்கு இரத்த சேதம் இல்லாமல் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அரிசோனா என்ற இடதில் தான் இது நடந்தது.மருத்துவர்கள் என்ன செய் தார்கள் என்றால் அந்த நோயாளியை ஒரு 40 நிமிட நேரம் இறந்த நிலையில் வைத்திருந்த பின்பு பிழைக்க வைத்துவிட்டார்கள்.இந்த இடைவெளி நேரத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது.

முதலில் அந்தப் பெண்ணை கோமா நிலைக்கு கொண்டு வந்து அவரது இதய ஓட்டத்தை நிறுத்தி வைத்து விட்டார்கள்.440 சென்டிகிரேட் வெப்பநிலையில் உட லைக் குளிர வைத்துவிட்டார்கள். அவரது உடலி லிருந்து இரத்தத்தை வடித்தெடுத்து அறுவைச் சிகிச்சை செய்து பழையபடி உயிர்க்க வைத்துவிட்டார்கள். அந்தப் பெண்ணின் வயது 61.அவர் ஒருவார காலத் திற்கு மருத்துவமனையில் இருந்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டார். பழையபடி வேலை செய்தார். இது ஒரு பெரிய சாதனை.

ஏனென்றால் இருதயத்தை நிறுத்தி வைப்பது என் பது அவ்வளவு சாதாரணவிடயமில்லை. சிலர் எனது இதயத்தையே அவளிடம் ஒப்படைத்துவிட்டேன் என்று சொலவார்களே எதற்காக? "அவளுக்காக உயிரையே கொடுக்க சித்தமாக இருக்கிறேன் என்று அர்த்தம்" அப்படிப்பட்டவர்களைக் கூப்பிடும்போது கூட என் இதயமே என்று தான் கூப்பிடுவார்கள். என் கட்டைவிரலே என்று கூப்பிடுவதில்லை.

இன்னொரு விடயம் இதயத்தைக் கொடுக்கிறேன் என்று சொல்பவர்கள் கூட மூளையைக் கொடுக்கி றேன் என்று சொல்வதில்லை. மூளையைக் கொடுத்து விட்டேன் என்று சொன்னால் புத்திகெட்டுப்போய் விட் டேன் என்று அர்த்தம்.

எனது நண்பன் ஒருவன் "நான் எனது இதயம், மூளை இரணடையும் எனது மனைவியிடம் கொடுத்துவிட்டேன்" என்றார். 'எப்படி? என்று கேட்டேன்."கல்யாணத்திற்கு முன்பு இதயத்தைக் கொடுத்தேன். கல்யாணத்திற்குப் பின் மூளையைக் கொடுத்துவிட்டேன்" என்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மறவன் மாஸ்டரின் வித்துடலுக்கு பல்வேறு இடங்களிலும் அஞ்சலி

### வத்திராயன் மாவீரர் துயிலும் இல்லத்தில் நாளை வித்துடல் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகவனம் காரணமாக கடந்த சனிக்கிழமை வீரச்சாவடைந்த கடற்புலி களின் மூத்த தளபதி லெப்ரினன்ட் கேணல் மறவன் மாஸ்டரின் (வயது 68) அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை குருநகர் கலையரஙகில இடம் பெற்றது.

அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் முகமாலை,கொடிகாமம், சாவகச் சேரி, கைதடி,கொழும்புத்துறை, பாஷையூர், திருநகர் ஊடாக எடுத்துவரப பட்ட அவரது வித்துடல் மக்களின் அஞ்சலிகாக குருநகர் கலையரங் கில் நேற்றுமுன் தினம இரவு 7.00 மணிக்கு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை குருநகர் பங்குத்தந்தை சகாயம் அடிக ளார், மரியன்னை பேராலய பங்குத் தந்தை மைக்கல் சவுந்தரநாயகம்,யாழ். மாவடட மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றினர்.

ஈகச் சுடரினை வீரச்சாவடைந்த மறவன் மாஸ்டரின் மகள் ஏற்றினார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. அதனையடுத்து நினைவுரைக ளினை ஜெயசேகரம் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவா சொலமன் சூ.சிறில்,கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன்குருநகர் ஐக்கிய சமாசத்தின் உறுப்பினர் அகஸ்ரின் மாஸ்டர் ஆகியோர் நிகழ்த் தினர்.

மலர்மாலையினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி அருணன் மாஸ்டர் , கிழக்கு மாகாண கடற்புலி களின் தளபதி இனியவன், யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் அணிவித்தனர். அதனைத்தொடர்ந்து குருநகர் கடற்றொழிலாளர் சங்க முக்கியதஸ்தர்களும் பொதுமக்களும் மலர்மாலை அணிவித்து அஞ் சலி செலுத்தினர்.இவ அஞ்சலி நிகழ்வினை தொடர்ந்து மறவன் மாஸடரின் வித்துடல் வேலணை அரசியல்துறை அலுவலகத்துக்கு எடுத்துச செல்லப்பட்டது. தொடர்ந்து யாழ். குடாநாடடின் பல்வேறு இடங்களிலும் இவரது வித்து டல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை புதன்கிழமை வடமராட்சி கிழக்கு வத்திராயன் மாவீரர்துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள்ளது. (ற-4,8)

# இயற்கை வளங்களை அழிக்கும் கடற்றொழில் முறைகளுக்கு தடை?

(மருதங்கேணி)

கடலில் காணப்படும் இயற்கை வளங்களை அழிக்கக்கூடிய கடற்றொழில் முறைகளை தடை செய்வது குறித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனம் ஆராய்ந்து வருகிறது.

கடலில் காணப்படும் இயற்கை வளங்களை அழிக கக்கூடிய கடற்றொழில் முறைகளால் மீன் குஞ்சுகள் அழிக்கப்பட்டு வருகிறது. இதனால் மீன் இனம் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நோலா இழுவைப் படகுகள் மூலம் தொழில் செய்வதால் கடலில் உள்ள சகல கடல் வளங்களும் பாதிக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி தடைசெய்யப்பட்ட வலைகளால் மீன்பிடித் தொழில் செய்வதாலும் கடலில் இயற்கை வளம் அழிந்து போகிறது. இத்தகைய சட்டவிரோத மீன் பிடி முறைகளைக் கட்டுப்படுத்தவோ அதை மேற்கொள்ளாது தடுக்கவோ கடற்படையினரோ பொலி ஸாரோ எந்தவித நடவடிக் கையும் எடுக்காத பட்சத் தில் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் சம்மேளனம் இதற் கான நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இத்தகைய (கடல் வளங்களை அழிக்கும்) கடற் றொழில் முறைகளை தடை செய்வது என்ற சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதற்கான முக்கிய மாநாடு ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது. வடகிழக்கு மாகாணங்களில்உள்ள எட்டு மாவட டங்களில்உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரத நிதிகள்,கடல்வளம் சார்ந்த நிபுணர்கள், ஊட கவிய லாளாகள் சகலரும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள். (க-35)




## சபாநாயகர் லொக்குபண்டாரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டாம்

சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார வுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையை உடனடியாக பாராளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டா மென ஜனாதிபதி தனது கட்சி அங்கத்தவர்களைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு சபாநாயகர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவ தற்கு ஆளுங்கட்சி தயாராகியிருந்தது.இந்நிலையில், அதனை உடனடியாக கொண்டு வரவேண டாமெனவும் அதற்குரிய காலம் குறித்து தான் அறிவிப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் ஜன வரி மாதம் நடுப்பகுதியில் கொண்டுவரப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விவசாயிகள் இருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வடமுனை ஊற்றுச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை விவசாயிகள் இருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர்.இவர்கள் தமது வீடுகளில் தங்கியிருந்த சமயமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. அதே இடத்தைச் சேர்ந்த முத்துகிருஸ்ண பிள்ளை (வயது 39),கணபதிப்பிள்ளை உதயகுமார் (வயது 34)ஆகிய இரு விவசாயிகளுமே சுட்டுக்கொல் லப்பட்டவர்களாவர். (ச)

# க.பொ.த [சா/த]பரீட்சையில் அடுத்த ஆண்டு புதிய பாடம்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு சுற்றாடல் சம்பந்தப்பட்ட பாடம் அடுத்த ஆண்டில் இருந்து சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இதுபற்றித் தெரிவிக் கையில்,

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையிடம் கோரப்பட்டுள்ளது. சுற்றாடல் சம்பந்தப்பட்ட பாடத்தைப் போதிப்பதற்கு பட்டதாரிகள் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

சுற்றாடலைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி பாடசாலை மாணவர் களுக்கு உணர்த்துவதே இதன் முக்கிய நோக்கமாகும் எனக் குறிப் பிட்டார். (ற-4)

# பிள்ளைகள் பெற்றோரை எதிர்த்து வாதம் செய்வது ஏன்?



பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடம் தலையீட்டிற்கும், அக்கறைக்கும் இடைப்பட்ட ஒரு நடுநிலையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

எனது நணபர் தனது 14 வயது மகளை எப்பொழுதும் நச்சரிதகுக்கொண்டே இருப்பார். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் எனக் கேட்டால், சொல் பேச்சைக் கேட்பதில்லை. எதற்கெடுத்தாலும் எதிர்த்து வாதம் செய்கிறாள் எனக் காரணம் கூறுகிறார்.

நண்பர் எதையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள விரும்புகிற மனிதர். அவருடைய இந்த அணுகுமுறை தன் மகளிடம் ஒரு பாதகமான போக்கை உருவாக்கும் எனறு அவரிடம் கூறியிருக்கிறேன்.

அந்தப் பெண்ணுக்கு ஒரு பத்து வயது தங்கையும் இருக்கிறாள். அவள் அடக்கமும், கீழ்ப்படியும் குணமும் கொண்டவள். அதனால் தந்தையுடன் அவள் எளிதாக ஒத்துப்போகிறாள். இது மூத்தவளிடம் பொறாமையையும் எரிச்சலையும் தூண்டுகிறது.

14வயது என்பது ஒரு சிக்கலான பருவம். இதை நண்பர் உணரவில்லை. அவருடைய ஆத்திரமும், இயலாமையும் அந்த வீட்டின் நிம்மதியைப் பெரிதும் குலைக்கிறது.

உங்களுடைய பிள்ளைகள் கைக்குழந்தை நிலையிலிருந்து தத்தித் தவழும் பருவத்தை எட்டிய அந்தக் காலகட்டத்தை நினைத்துப் பாருங்கள். மெல்லப் பரிணமித்த அவள் குணாதிசயங்களுக்கேற்ப நீங்கள்தான் அப்பொழுது உங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அவளுடைய அழுகைக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் காரணம் புரியாமல் அப்பொழுது நீங்கள் கொஞ்சம் எரிச்சல் கூட அடைந்திருக்கலாம்.

டின்-ஏஜ் பருவம் என்பது கூட அத்தகைய ஒரு பருவ மாறுதல்தான். இந்தக் காலகட்டத்தில் உங்கள் மகள் வேகமாக வளர்கறாள். இவ்வளர்ச்சி உடல், அறிவு மற்றும் உணர்வு ரீதியானது. இந்த வயதில் அவள் பாதிப் பெரியவள் என்பதை மறந்துவிடவேண்டாம். அதனால்தான், ஒரு குழந்தையாக நடத்தப்படும்போது அவளைப் புண்படுத்துகிறது. உங்களை அறியாமல் நீங்கள் அவளுடைய தன்னம்பிக்கையை காயப்படுத்தக்கூடும்.

என்னுடைய வாழ்க்கையை என்னாலேயே திறம்பட நடத்தமுடியும் என்கிற போது இவர்கள் ஏன் தேவையின்றி இடையே புகுந்து அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்? என்று அவள் நினைப்பாள். உங்கள் ஆணைகளும், கட்டளைகளும் தன்னை ஒரு குழந்தைபோல உணரவைப்பதால் அவற்றை வெறுக்கிறாள். இந்த வயதில் தன்னுடைய அந்தரங்கமான வைகளை கட்டிக்காப்பவளாகவும, அதை வெளியில் சொல்ல விரும்பாதவளாகவும் இருப்பாள்.

எங்கே போனாய்?, என்ன செய்தாய்? போன்ற கேள்விகளை அவள் விரும்புவதில்லை. வளர்ந்துவிட்ட ஒருவர் மீது நங்கள் வைக்கக்கூடிய நம்பிக்கையை ஏன் தன்மீது வைப்பதில்லை என்று சலித்துகொள்வாள். ஏனென்றால் அப்பொழுது அவளைப் பொறுத்தவரை நன்கு வளர்ச்சியடைந்து விட்ட ஒரு பெண். இந்த வயதில் தன்னை சுயசோதனைக்குள்ளாக்குவதில் அதிக நேரம் செலவழிப்பாள்.

டின் -ஏஜிற்கே உரிய குழப்பங்களையும், மனப் போராட்டங்களையும் சந்துகொள்வதற்கும் களைவதற்கும் அவள் முயற்சி செய்யும் காலம் இது. தன் உடலிலும், மனதிலும் நிகழும் மாற்றங்கள் அவளைக் குழப்பமடையச் செய்யும்.

இந்த நேரத்தில் நீங்கள் காட்டுகின்ற எந்த அதீதமான அக்கறையும் தேவையாற்றதாக அவளுக்குப் படும். அவளது அந்தரங்கத்தில் மூக்கை நுழைப்பதாகவே அவளுக்குத் தோன்றும்.

ஆனால், உங்கள் மகளுக்கும், உங்களுக்கும் இடையில் எழுந்த தடுப்புச்சுவர் எதனால் உருவானது என்ற குழப்பத்தில் நீங்கள் இருப்பீர்கள். தன் அந்தரங்க உணர்வுகள், எண்ணங்கள், சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடுவதை உங்கள் மகள் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொள்வாள். இந்தப்போக்கு உங்கள் குழப்பத்தை மேலும் அதிகரிக்கும். அதுமட்டுமல்ல அவள் தொடர்பான சிக்கல்களைக் களைய முடியாமல் திண்டாடுவீர்கள். நாம் ஒரு சிறந்த அப்பாவாக இல்லையோ? என்ற ஐயங்கள் உங்களை அலைக்கழிக்கும். இந்தச் சிக்கல்கள் பிள்ளைக்கும், பெற்றோருக்கும் இடையிலான இடைவெளியை அதிகப்படுத்தும்.

### அச்சங்களும் ஐயப்பாடுகளும் நிறைந்த டின் – ஏஜ் பருவம்

பொதுவாகவே டின், -ஏஜ் பருவத்தைச் சேர்ந்தவர்கள. தன்னமபிக்கையைக் குறைவாகக் கொண்டிருப்பார்கள். தம்மில், தம் தோற்றத்தில் நிறைய குறைகளைக் காண்பார்கள். இத்தகைய அச்சங்களும், ஐயப்பாடுகளும் கொண்டவர்களிடம் பழகுவது சிக்கலான காரியம். சாதாரணமாக நாம் சொல்லுகிற சொற்களைத் திரித்து பொருள் கொள்கிற போக்கு இந்தக் காலகட்டத்தில் மிகுந்திருக்கும்.

ஏறக்குறைய எல்லா உறவு முறையினரிடமும் இந்தக் குளறுபடி இருந்தாலும், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இப்படிப்பட்ட கருத்து முரண்பாடு ஏற்படுமானால், அது இருசாராருக்கும் மிகுந்த மனவேதனையை உண்டாக்கும்.

தன் கட்டளைகளை பிள்ளைகள் மறும்போது, தன் அதிகாரத்தையே அவர்கள் தட்டிக்கேட்பதாக அப்பாவுக்குத் தோன்றும். தந்தை என்கிற தன் நிலையையே அவர்கள் உதாசீனப்படுத்துவதாக நினைப்பார்கள். ஒரு அப்பாவால் இதைத் தாங்கிகொள்ள முடியாது.

சின்னவயதில் எந்தப் பெண் குழந்தையும் தன் அப்பாவிடம் மிகவும் பாசமாக இருக்கும். அவரை ஆராதிக்கும். இந்தப் பாசத்திற்கும், ஆராதனைக்கும் பழக்கப்பட்டுப்போன ஒரு தந்தையால் தன் டின்- ஏஜ் மகளின் எதிர்காலத்தை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாதுதானே.

தாய்- மகள் உறவு முறை என்பது தகப்பன் - மகள் உறவு முறையிலிருந்து மிகவும் மாறுபட்டது. டின்-ஏஜ் பருவத்தில் எந்த ஒரு பெண்பிள்ளையும் தன் தாயிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது இயல்பு. தந்தையுடன பகிர்ந்துகொள்ள இயலாத அச்சங்களையும் ஐயப்பாடுகளையும் தாயுடன் பகிர்ந்து கொள்கிறாள். தாயுடன் ஒட்டுதலாக இருக்கின்ற மகள் தன்னுடன் அப்படி இல்லையே என்று தந்தை ஏங்குகிறார். விலக்கி வைக்கப்பட்டது போல் உணர்கிறார். இன்னொரு கருத்துக் கூட இதை மேலும் சிக்கலாக்குகின்றது. தன் பார்வையில தன மகள எப்போழுதும் குழந்தையாகவே தென்படுகிறாள். அவள் வளர்ந்துகொண்டிருக்கிறாள் என பதை உணரத் தவறிவிடுகிறார். டின் -ஏஜ் மகளின் ஒவ்வொரு புதிய பழக்கமும்- மகளைப் பற்றித் தன் மனதில் தான் பதிந்துவைத்திருக்கும் எண்ணத்திற்கு முரணாக இருப்பதால் அவரை வெறுப்பேற்றுகிறது.

இந்தச் சூழ்நிலையில் தாய் என்கிற முறையிலும் மனைவி என்கிற முறையிலும் பெண்களுக்குப் பெரிய கவலை ஏற்படும். சச்சரவுகளைத் தவிர்க்கும் பொருட்டு அப்பாவும் மகளும் நேருக்கு நேர் பார்த்துக் கொள்வதையும் தவிர்க்கத் தொடங்குவர். வடே ஒரு போட்டிக் களமாகக் காட்சியளிக்கும்.

என் விருப்பப்படி தான் நடப்பேன் என அடம்பிடிக்கும் 14 வயது மகளுக்கும், குடும்பத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனையும் அப்பாவுக்கும் இடையில் நடக்கின்ற போட்டி, வீட்டை அல்லோலகல்லோலப் படுத்திவிடும். இவர்கள் இருவருக்கும் நடுவில் ஒரு சமாதான உடன்படிக்கையை ஒரு பெண்ணால், தாயால் ஏற்படுத்த முடியுமா?

## பாதுகாப்பற்ற படகுச் சேவை

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுப் பகுதிக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகளில் பயணிகள் நலன் பாதுகாக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தீவுக்கு பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகள், பயணிகளின் நலன் பாதுகாகக்கப்படுவதனை உறுதிப்படுத்தவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இப்படகுகளில் இருகைவசதிகள் போதியதாக இல்லை எனவும், இயந்திரத்தின் இரைசல் அதிகமாக இருப்பதாகவும், குடிநீர்வசதி, முதலுதவிப் பொருட்கள், பாதுகாப்பு கவசம் என்பன படகுகளில் இல்லை எனவும் பயணிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தாங்கள் பெரும் கஸ்ரங்களின் மத்தியிலேயே பிரயாணம் செய்யவேண்டிய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டுகினறார்கள்.

இத்தீவுப்பகுதிக்கு சேவையில் ஈடுபடும் எட்டு படகுகளிலும இந்நிலை காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இப்படகுகளினைச் செலுத்துபவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-75)

## மதிப்பீடு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இயங்குகின்ற உள்ளூர் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் முகமாக கைத்தொழில் நிலையங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளை இலங்கை புளளிவிபரத் திணைகளம் மேற்கொள்ளும் என இலங்கை புள்ளிவிபரப் பணிபபாளர் விமால் நாணயக்கார தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும தொிவிகையில 10க்கும மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் கைத்தொழில் நிலையங்களும் இதில் கவனத்தில் எடுக்கப்படும என்றார்.

(க-5)

## கொழும்பு இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற

# கிரனேட் தாக்குதலில் காயமடைந்த நால்வரின் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சனிக் கிழமை இரவு இடம்பெற்ற கலை நிகழ்சசியின் போது மேற்கொள் ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் காயமடைந்தவாகளில் 13 வயது சிறுமி உட்பட நால்வரின் நிலை கவலைக் கிடமாக இருப்பதாக தேசிய வைத் தியசாலையின் விபத்துச் சேவைப் பணிப்பாளா டாக்டர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பிரபல ஹிந்தி நடிகா ஷாருக் கான் உட்பட இந்திய சினிமா நட்சத்திரங்கள் பலர் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சியில், மேற் கொள்ளப்பட்ட கிரனேட் வீச் சில் இருவர் பலியானதுடன், சுமார் 20க்கும் அதிகமானோர் காய மடைந்திருந்தமை தெரிந்ததே,

இச்சம்பவத்தில் காயமுற் றோர் தொடர்பாக தேசிய வைத்தியசாலையின் விபத்துச் சேவைப் பணிப்பாளர் டாக்டர் வீரசிங்க கருத்துக் கூறுகையில்,

இக் கிரனேட் குண்டு வெடிப்பில் 20க்கும் அதிகமானோர் காய மடைந்தபோதும் 10 பேர் கொழும்பு தேசிய வைத் திய சாலையில் தொடாந்து சிகிச்சை பெற்று வருகின்றனா. இவாகளில் நால்வர் அவசர சிகிச்சைப் பிரி வில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை படுகாயமடைந்த வர்களில் இருவர் கொழும்பு அப்பலோ தனியார் மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர். இவர்கள் இருவரும் இந்திய பிரஜைகளாவர். இவர் களில் ஒருவர் இந்திய கிறிக் கெட் அணியின் முன்னாள் வீரரும், கிறிக்கெட் வர்ணனையாளரு மான ரவி சாஸ்திரியின் மனைவி ரித்து ரவி சாஸ்திரியாவார் என்றார்.

இந்தத் தாக்குதலில் கொழு ம்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடமையாற்றும் இரத்தின புரியைச் சோர்ந்த டிலானி மகே ஷிகா (வயது-25) மாத்தறை ஹக்மனவைச் சேர்ந்த லங்கா தீப பத்திராகையின் சகோதர வெளியீடுகளான விஜய, தருணய ஆகியவற்றின் படப்பிடிப்பாளர் லங்கா ஜெயசுந்தர (வயது-21) ஆகிய இருவருமே பலியானவர் களாவர். இவர்கள் இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனை யின் பின்னர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டன. இத்தாக்குலில் படு காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பொலிஸ் சாஜன்ட் அனில இக் கிரனேட் வீச்சு குறித்து குறிப்பிடுகையில்,

மேற்படி கலை நிகழ்ச்சி இரவு 11.30 மணியளவில் நிறைவ டையவிருந்தது. நான் மேடைக் கருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தேன். இறுதி நிகழ்வு இரவு 11.15 மணியளவில் நடை பெற்றுக் கொண்டிருந்த போது திடீரென வெடிச் சத்தமொன்று கேட்டது. பட்டாசு சத்தம் என் றெணணினேன். சற்று நேரத்தில் எனது உடம்பின் இடுப்பு பகுதியி லிருந்து இரத்தம் கசிந்தது. பின் னர் உடலில் வலி ஏற்படவே நிற்க முடியாமல் அதே இடத்தில் இருந்து விட்டேன். மேடைக்கு அருகே இருந்தவாகள் கூச்சலிட்ட வண்ணம் அல்லோல கல்லோ லப்பட்டு அங்குமிங்கும் ஓடினர். சிலர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். சிலர் வலி தாங்க முடியாமல் கத்தினர். இறுதியில மயக்கமுற்ற நிலையில் வைத் தியசாலையிலேயே விழித்துப் பார்த்தேன் என்றார்.

இக கிரனேட் வெடிப்புச் சம்ப வத்தையடுத்து ஷாருக்கான் உட்பட இந்தியகலைஞர்கள் நேற்று முன்தினம் அதிகாலை 2.15 மணியளவில் உடனடியாக விமானம மூலம் இந்தியாவுக்கு பாதுகாப்பாக அனுப்பிவைக்கப் பட்டனா.

இது இவ்வாறிருக்க இத்தாக்கு தலில் காயமடைந்து வைத்திய சாலையில அனுமதிக்கப்பட் டுள்ளவர்களிடமிருந்து பொலிஸார் வாக்கு மூலம் பதிவு செய்து வருகின்றனர். கிரனேட வெடிப்பு குறித்து இரசாயன பகுப்பாய் வாளாகளும விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இத்தாக்குத லில் அரசியல் சதித் திட்டமிருக் கலாம் என்ற பொலிஸ் தரப்பு சந் தேகம் தற்போது மேலும வலுவ டைந்துள்ளது. (ற)

## 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

'வரலாறு தந்த' வல்லமை பாடல் ஒலிப்பேழை அறிமுக விழா யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ளது.

2 ஆம் லெப்ரினன் மாலதி படையணியின் உருவாக்கத் தில் இசைவானர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' பாடல் ஒலிப்பேழை அறிமுகவிழா எதிர் வரும் 18 ஆம் திகதி சனிக் கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது. (ற-4)

## ஒட்டமாவடியில் இரவுவேளையில் ஆயுதக் குழுக்கள் வன்முறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை ஒட்டமாவடி பிரதேசத்தில் இரவு நேரங்களில் ஆயுதக் குழுக்க ளின வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வரு கின்றன.

முஸ்லிம்கள் வாழும் இப்பிர தேசத்தில் இடம்பெற்றுவரும் இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு முஸ்லிம ஆயுதக் குழுவொன்றே காரணமாக இருக்கலாம் என்று வாழைச்சேனை பொலிஸார் சந் தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 8.00 மணியளவில வாழைச்சேனை கல்வி அலுவலகத்தில் பணி யாற்றும் எம்.என்.நசீர் என்ப வரின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வீட்டிற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றும, வீட்டின் முன் பகுதியும் சேதமடைந்தது.

மிராவோடையிலுள்ள மோட் டர் சைக்கிள் திருத்துநர் ஒரு வரின் வீட்டின் மீதும் கடந்த சனிக்கிழமை இரவு 10.00 மணி யளவில் இரண்டாவது கைக்குண்டு வீசப்பட்டது.

இந்த இரண்டு சம்பவங்களுக்கு மான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை கண்டறியப் படவில்லை. (ற)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கல்வி ஊழியர்கள் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வரும் தேசியபாடசாலைகள், ஆசி ரியர் கலாசாலைகள், தேசிய கல் விக் கல்லூரிகள் ஆகிய நிறு வனங்களில் நிலவும் கல்வி சாரா ஊழியர்களை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்த துடன், விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 5.12.2004 என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு பல மட்டங்களில் இருந்து வேண்டுகோள்கள் விடப் பட்ட காரணத்தினாலே அத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார். (க-5)

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

# எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக சொத்து சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின பேரில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதி ராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த வெள் ளிக்கிழமை வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கும், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம 30ஆம் திகதிக்கும் இடைப பட்ட காலப்பகுதியில் எஸ்.பி.திஸ நாயக்க வருமானத்துக்கும் கூடு தலாக சட்டபூர்வமற்ற முறை யில் 2 கோடி 90 இலட்சம் ரூபாவை சம்பாதித் திருப்பதாக குற்றப்பத்திரிகையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையை எவ் வாறு சம்பாதித்தார் என்பது பற்றி, எஸ்.பி.திஸநாயக்க தகவல் எதனையும் வெளியிட வில்லை என அவ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இக் குற்றசாட்டுக்களின் பேரில் முன்னர் கைது செய்யப் பட்ட எஸ்.பி.திஸநாயக்க, 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணை யிலும், ஒரு கோடி ரூபா உத் தரவாதப்பிணையிலும் விடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# இலங்கை கடற்படையினருக்கு எதிராக இந்தியப் பாராளுமன்றம் முன் போராட்டம்!

## நடத்தப்போவதாக தமிழக மீனவர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர் மீதான இலங்கைக் கடற்படையினரின் நடவடிக்கைகளைக் கண்டித் தும், அவர்களின் இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு ஆவன செய்யவேண்டுமெனக் கோரி யும், இந்திய நாடாளுமன்றத் தின் முன் போராட்டம் நடத்தத் தமிழக இராமேஸ்வர புதுக் கோட்டைப்பகுதி மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இராமேஸ்வரம் புதுக்கோட்டை ஆகிய மாவட்ட மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படை யினரால் தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படு வதும், அதிகரித்து வருகின்றன.

கடந்த 9ஆம் திகதி புதுக் கோட்டை மாவட்டம் ஜெகதா படடணத்தைச் சேர்ந்த 13 மீனவர் களை இலங்கைக் கடற்படை யினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன், இராமேஸ்வரத் தைச் சேர்ந்த மீனவர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது.

இதில் மூன்று படகுகள் கடலில் முழ்கடிக்கப்பட்டன. இதனையடுத்து, இராமேஸ்வரம் மற்றும புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத் தினை ஆரம்பித்துள்ளார்கள்.

தங்களது அடுத்த கட்டப் போராட்டம் குறித்து தமிழக புதுவை மீனவர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

மத்திய மாநில அரசுகள் மீனவர் விடயத்தில் எங்களைத தொடர்ந்தும் புறக்கனித்து வருகின்றன.

எங்களது நீண்ட நாள் கோரிக்கைகளை இரு அரசு களும் புறம்தள்ளி வருகின்றன.

இதனால் தற்போது கால வரையறையற்ற வேலை நிறுத் தம் செய்து வரும் மீனவர்களாகிய நாம் அடுத்த கட்டமாக டில்லி சென்று நாடாளுமன்றம் முன்பு போராட்டம் நடத்தத் திட்டமிட்டு வருகின்றோம்.

இந்த போராட்டத்திற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

சச்சதீவுப் பகுதியில் மீன் பிடிப்பது எங்களது பாரம் பரிய உரிமை. அதை நாங்கள் ஒரு போதும் விட்டுக்கொடுக்கமாட் டோம். எங்களது உயிரிருக்கும் வரை போராடுவோம் என்றார். (க-9)

# 'அமெ. இராணுவத்திற்கு உதவக் கூடாது' என்ற நிபந்தனையிலேயே விடுவிக்கப்பட்டேன்

## தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணம்

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு தம் முடன தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 பேரில் 2 பேர் கழுத்து வெட்டப் பட்டும் 3 போ சுடும தங்களுகு முன்னால் கொலை செய்யப் பட்டதாக விடுதலையாகி நேற்று முன் தினம் கொழும்பு வந் தடைந்த தினேஸ் தர்மேந்திரா ராஜரட்னம் தனது அனுபவம் பற்றித் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

நானும் என்னுடன் பிடிக்கப் பட்ட பங்களாதேஸ் பிரஜையும் விடுதலையாகியுள்ளோம். ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க இராணுவத்தினருக் குப் பொருட்களை ஏற்றும் பணி களில் ஈடுபடமாட்டோம் என்ற உறுதிமொழியின் அடிப்படை யில தான் நாம் விடுதலை செய யப்பட்டோம். கைது செய்யப்பட்ட ஆரம்ப நாட்களில் நாங்கள் தாக்கப்பட்டோம்.

பின்னர் நான் இலங்கையர் என அவர்கள் தெரிந்து கொண் டதையடுத்து, அந்த நிலை மாறியது. நான் விடுதலை செய் யப்படுவேன் என்று எதிர்பார்க்க வில்லை. காரணம் எங்களுடன் இருந்த ஏனைய 5 பேரும் கொல் லப்பட்டு விட்டார்கள்.

செய்த குற்றங்களுக்கு அமை யவே அவர்களது தண்டனை அமையும். அதாவது அமொக்க உளவாளிகள் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டார்கள். ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய வர்கள் சுட்டுக் கொல்லப்பட் டார்கள். வெளித் தொடர்புகள் எதுவும் எனக்கு இல்லாத கார ணத்தினால் நான் கொல்லப் பட்டிருக்கலாம் என எல்லோரும நினைத் திருந்தார்கள். என்னிடம் வாக்கு மூலங்கள் பதிந்த பின்பு வீடியோ பண்ணி தொலைக் காட்சி ஊடாக ஒளிபரப்பிய பின்பு தான நான் உயிருடன் இருப்பது சகலருக் கும் தெரியவந்தது.

அமொக்க இராணுவத்திற்கு பொருட்களை விநியோகம் செய் வதை நான் தொழில் புரிந்த குவைத் நிறுவனம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஈராக் கிய தீவிரவாதிகளால் அந்நிறு வனத்திற்கு நிபந்தனை விதிக் கப்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கையர் எவரையும் சாரதி களாக ஈராக்கிற்கு அனுப்ப வேண்டாம் என்று மற்றுமொரு நிபந்தனையையும் விதித்துள் ளது. இந்த நிபந்தனை அடிப்ப டையில தான் நான விடுவிக்கப் பட்டேம் எனக்குறிப்பிட்டார். (ற-4)

## காரைநகருக்கான தனியார் சிற்றூர்திச் சேவை விஸ்தரிப்பு

(காரைநகர்)

காரைநகரிற்கான தனியார் சிற்றூர்திச் சேவை விஸ்தரிக் கப்பட்டுள்ளதாக காரைநகர் சிற்றூர்திச் சேவையினர் தெரி வித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகருக்கான தனியார் சிற்றூர்திச் சேவையை இரவு 7.30 மணிவரை நீடிக்குமாறு காரைநகர் பயணிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே, தனி யார் சிற்றூர்த்திச் சேவை விஸ் தரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுதல் தமது சேவையை இரவு 7.15 மணிவரை நீடித்துள் ளதாகவும் இச் சேவை 784 ஆம் இலக்க பாதையூடாக நடைபெறும என்றும் பயணிகள், குறித்த நேரத்திற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் காரைநகர் சிற்றூர்திச் சேவையினர் கேட் டுள்ளனர்.

கடந்த இரு வாரங்களாகக் காரைநகர் மேற்கு வீதிக்கான சேவையை வடபிராந்தியப் போக்கு வரதுச் சபை இடை நிறுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (க-246)

# ஐயங்கள் ஆயிரம்

## வெட்கத்தால் முகம் சிவப்பது ஏன்?

ஒருவர் வெட்க்கப்படும்போது முகத்தில் கன்னங்களும் கழுத்துப் பகுதியும் சிவந்து விடுகின்றன. இதற்குக் காரணம் திடீரென ஏற்படும் மனக்கிளர்ச்சி. குழப்பம், வெட்கம் அல்லது மகிழ்ச்சியே ஆகும்.

ஒரு பெண் தனக்குப் பிடித்தமான வரை அல்லது காதலிப்பவரைப் பார்க்கும் போது இந்த உணர்வுகளுக்கு ஆட்படுகிறாள். முகத்தில் உள்ள தோலில் உட்பகுதி பரப்பில் உள்ள ஏராளமான இரத்த நாளங்கள் விரிவடைந்து அதிக இரத்தம் பாய்வதால் முகம்சிவக்கிறது.

இது பெரும்பாலும் கறுப்பு அல்லது மா நிறம் உள்ளவர்களிடம் அதிகமாகத் தெரிவதில்லை. சற்று வெளுத்த தோல் இருப்பவர்களுக்கு கன்னமும் கழுத்தும் சிவப்பாவது நன்றாகத் தெரியும்.

# ஓடியதனால் மாறிய உடலமைப்புகள்



மனித உடலமைப்பு இன்றிருக்கும் நிலைக்கு வரக் காரணம் மனிதனுக்கு இருந்த ஓடும் தன்மைதான் என்கின்றனர் உயிரியல் ஆய்வாளர்கள். விலங்குகளை வேட்டையாடவும் பிற காரணங்களுக்காவும் நீண்டதூரம் குரங்கு போன்ற அமைப்புக்கொண்ட நம் முன்னோர்கள் ஓடத் தொடங்கினர் என்கின்றனர். ஓடுவதற்கும் உடலில் பல மாற்றங்கள் தேவைப்பட்டன. ஏனெனில், மனிதன் தோன்றியது, ஓடத்தெரிந்த ஆஸ்டிராலோபைதசைன்ஸில் இருந்துதான்.

நமது ஜீன்ஸலான ஹோமோ 20 லட்சம் அல்லது அதற்கு மேலான ஆண்டுகளுக்கு முன் ஆஸ்டிராலோபைதகஸிலிருந்து தோன்றியது. காலம் செல்லச்செல்ல மனித உடலில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக மனிதனால் நீண்டதூரம் ஓட முடிந்தது.

ஓட்டம்தான் நம்மை உடலளவில் மனிதனாக்கியது எனலாம். மனித சரித்திரத்தில் உள்ள மிகமுக்கிய மாற்றங்கள் உண்டாக்கியவற்றுள் ஒன்று ஓட்டம் என்று நம்புகிறோம் என்கின்றனர் உயிரியல் நிபுணர்கள். இக்கண்டுபிடிப்பு முன்னைய கண்டுபிடிப்புகளுக்கு முரணாக உள்ளது. இதுவரை மனிதனின் நடக்கும் தன்மையிலிருந்து சாதாரணமாக வளர்ந்ததுதான் இந்த ஓடும் தன்மை எனப்பட்டது. ஆனால், இந்தக் கண்டுபிடிப்பில் ஓடுவதால்தான் ஹோமோவுக்கும் ஆஸ்டிராலோபைதகஸிற்கும் உடலில் வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன எனப்பட்டுள்ளது.

45லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய குரங்குபோன்ற ஆஸ்டிராலோபைதகஸால் இரண்டு கால்களில் நேராக நடக்கமுடியும். ஆனால் அடுத்து 30லட்சம் ஆண்டுகளுக்கு மேல் உடலில் பல மாற்றங்களை உடைய ஹோமோ தோன்றவே இல்லை. ஹோமோவில் முதலில் ஹோமோ ஹேபலஸ், ஹொமோ எரக்ட்ஸ் பின்னர் நம் இனமான ஹோமோசேப்பியன்ஸ் தோன்றின.

எனவே, நடப்பதை வைத்து தற்போதைய மனிதனின் உடலமைப்பை விவரிக்கமுடியாது என்கிறார்கள் ஆய்வாளர்கள். 25,30லட்சம் ஆண்டுகளாக மனிதர்கள் போல் இல்லாதவர்களிடம் இருந்து வந்த இருகாலினால் நடக்கும் தன்மைக்குப் பிறகு, ஓட்டம்தான் உடலில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்கின்றனர்.

ஹோமோவுக்கும் ஆஸ்டிராலோபைதிகஸிற்கும் உடலளவில் பல வேறுபாடுகள் இருந்தன. இயற்கையின் உருவாக்கத்தில் ஓடும் தன்மை இல்லாதிருந்தால் நாம் இன்றும் முந்தைய குரங்கு மனிதனைப் போன்றுதான் காட்சியளித்திருப்போம் என்கின்றனர். கிடைக்கப்பெற்ற பல ஹோமோ எரக்ட்ஸ் மற்றும் ஹோமோ ஹாபலனஸ் இதனை உறுதிப்படுத்துகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள். ஓடுவதற்கு வசதியான வகையில் உடல் அமைப்புகள் காலம் செல்லச் செல்லத்தான மாறியிருக்கின்றன என்கிறார்கள்.



கழுகுப்பார்வை என்று கேள்விப் பட்டுள்ளோம். இதுவும் அதே கோணத்தில் எடுக்கப்பட்ட படம்தான். சிறப்புச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தியாவிலுள்ள மதுரை மீனாட்சியம்மன் கோவிலைப் படத்தில் காணலாம்.

# 'நியூஸ்' என்ன இருக்கிறது

காலையில் எழுந்தவுடன் அன்றாடம் பத்திரிகைகளைப் புரட்டுவதிலும், பத்திரிகைகளில் என்ன நியூஸ் இருக்கிறதென்பதை அறிவதிலும் ஆர்வமில்லாதவர்கள் இன்று இல்லை என்றே கூறலாம்.

நியூஸ் என்றாற் செய்தி என்றே அர்த்தம். இந்த நியூஸ் என்ற சொல்லின் கதையே மிகவும் விந்தைமிக்கதாகும். செய்திப் பத்திரிகைகள் முதன் முதலில் பிரசுரமாகிய காலத்திலே நாற்திசைகளிலும், நாலாபக்கச் செய்திகளும் பத்திரிகைகளில் உண்மையிற் பிரசுரமாவதைக் குறிப்பிடுவதை வெளிப்படுத்தும் விதத்திலே வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு நாற்திசைகளையும் குறிப்பிடுவதற்காக திசைகளின் முதல் எழுத்துக்களை முகப்பிலே 'NEWS' என அச்சடித்து விட்டார்கள். பத்திரிகைகளின் முகப்பிலே அடிக்கப்பட்ட இந்த எழுத்துக்கள் சொல்வதற்கு இதமாக இருந்தமையால் எல்லோரும் நியூஸ் என்ன? என்ன? என்றே கேட்கவும், பேசவும் ஆரம்பித்தார்கள்.

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, என (NSEW)என்றே முதலில் எழுதியவர்கள் ஒரு முறை தவறுதலாக NEWS வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என அச்சடிபட்டபோது பத்திரிகை வாசிப்பவர்கட்டு இச்சொல் மிகவும் இலகுவாகவும், பிடித்தமாகவும் இருந்தமையால் வாசகர் விருப்பிற்கமைய நியூஸ் என்றே அடித்தமை. இன்று எல்லோருக்கும் வேண்டிய நியூஸ் ஆக அமைந்துவிட்டது.

-நீர்வைமணி

# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல -40

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?

வளர்ந்து வரும் இளம் ஹீரோக்ககளில் ஒருவரான இவருக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 40**
**'வலம்புரி – சங்குநாதம்'**
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:– 40**

படத்தில் உள்ளவரின் பெயர் :.....

அனுப்புபவரின் முழுப்பெயர் :.....

அனுப்புபவரின் முகவரி :.....

.....

.....

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல -38**
**சரியான விடை**

**நடிகை ஜோதிகா**

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 38இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

முதற் பரிசு :- A.கஜந்தினி
கூழாவடி,
ஆனைக்கோட்டை.

இரண்டாம் பரிசு :- தெ.இராசமணி
கண்டி வீதி,
கொடிகாமம்.

மூன்றாம் பரிசு :- கோ.துவாரகன்
'சபேஸ் டிரோட்',
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

P.செல்வராணி, வட்டுக்கோட்டை. V.C.சோதிநாதன், பண்ணாகம். K.கனகசபாபதி, தம்பசிட்டி. த.சுரேஸ்குமார், குப்பிளான். ஏ.சர்மிளா, அரியாலை. மு.பிறேமினி, மானிப்பாய். ம.ஜெயந்திரன், கொக்குவில். செ.அனுஷியா, கரவெட்டி. ம.றமணன, நாவேலி. கு.ஜனனி, புலோலி. ஜோ.கலாரஞ்சினி, சாவகச்சேரி. இ.கோபிநாத், புங்குடுதீவு. ஜெ.தாட்சாயினி, அல்வாய். த.ஜெயராம், யாழ்ப்பாணம். கி.இரத்தினேஸ்வரன், யாழ்ப்பாணம். ஜே.பார்த்தீபன், ஆனைக்கோட்டை. க.ரவீந்திரன், வரணி. தெள.யோகேந்திரன், யாழ்ப்பாணம். கு.டிலானி, கொக்குவில். வே.குமாரசுவாமி, கரவெட்டி. அ.ஷிவானு, யாழ்ப்பாணம், சி.விவேக், வியாபாரிமூலை. ந.நிரோஷா, புங்குடுதீவு. யோ.ரஜீவன், லக்ஷி, வட்டுக்கோட்டை. லோ.அபிராமி, வல்வெட்டி. வி.இளங்கோ, கோப்பாய். ஆ.அனுஷா, சித்தன்கேணி. சு.விதுஷன், வண்ணையூர். S.நிகேதினி, யாழ்ப்பாணம். சொ.நித்தியா, கொக்குவில். கு.நக்கீரன், மல்லாகம். சு.சித்திரா, யாழ்ப்பாணம். ஆ.அனித்தா, சித்தன்கேணி.

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

8

## கதிரைமலை இராச்சியமும் காலமும்

ஒரு தலைநகரைத் தலைநகராகக் கொண்டு ஒரு மன்னன் தன்னாணைக்குட்பட்ட நாட்டினை ஆட்சி புரிந்தான் என்றால் அந்நாடு அந்நகரின் இராச்சியத்தைச் சேர்ந்தது. அம் மன்னன் அந் தலைநகர் இராச்சியத்து மன்னர் அவன் ஆண்ட காலம் அத் தலைநகர் இராச்சியக் காலம். எனவே ஒரு மன்னன் அவன் அரசிருந்த தலைநகர், அவன் அரசிருந்த காலம், அவன் அரசாட்சி பண்ணிய நாடு ,அவன் அரசியற் பரிபாலனம் பற்றிய செய்தி என்றின்னவும் பிறவுமான சரித்திர விஷயங்கள் அத்தலைநகர் தொடர்பிலே அதிகரித்து வருகின்றன. ஈண்டுப் பேசப்புகுவது கதிரைமலைத் தலைநகரும் அதனுடன் தொடர்பு பெற்ற விஷயங்களுமாதலாலே அவை எல்லாமடங்க இவ்வதிகாரத்துக்குக் கதிரைமலை இராச்சியமும் காலமும் எனயாமே பெயர் தந்து பேசப்புகுகின்றோம் மேல்வரும் இராச்சியங்களுக்கும் விளக்கம் இ.ந்தே.

இக் கதிரைமலை இராச்சியமாவது இதன் முன்விளக்கத்துக்காக வைபவமாலையிற் சொல்லப்பட்டவைகளை ஈண்டைக்கு வேண்டப்படும் அளவுக்குச் சுருக்கமாகத் தருவோம்.

யாழ்ப்பாணத்தில் பண்டைநாட்களில் இருந்து மறைந்து போன தலைநகரங்களுள் ஒன்று இக்கதிரைமலை நகரம். இந்தியாவின் தென்பகுதியும் இலங்கையின் வடபகுதியும் அண்மித்து இருக்கின்ற இயற்கை வாய்ப்பதனால் அவ்விரண்டு நாட்டு வரலாறுகளும் கலந்து ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவைகளாக இருக்கின்றன. அதாவது தென்னிந்தியாவில் உள்ள சோழ பாண்டிய சேர வரலாறுகளும் இவ்விலங்கையின் உள்ள வடபகுதியில் உள்ள யாழ்ப்பாண இராச்சிய வரலாறும் ஒன்றோடொன்று சரித்திரத் தொடர்பு கொண்டவைகளாக இருக்கின்றன என்பதே என்னை யாழ்ப்பாண வரலாறே ஒரு சோழ இராச குமாரியில் இருந்துதான் ஆரம்பித்து உருவாகின்றது. இங்கே அவ் வரலாறுகளைக் கண்டு கொள்ளச் செல்வோமாக.

### யாழ்ப்பாண வைபவமாலை சொல்லும் விபரங்களைக் காண்போம

வங்க தேசத்து சத்திரிய மரபிற் பிறந்து இலாடதேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விஜயன் என்பவன் மகா துஷ்டனாக இருந்ததினால் அவனைப் பிதாவாகிய சிங்கவாகு தூரத்திவிட.... அவன் காசிக்குப் போய் அங்கே இருந்தான்.

"அவ்விடத்தில் விஜயகுமாரனுக்கு நீ இலங்கை நாட்டின் மத்தியிலுள்ள கதிரைமலையிற் போயிரு அந்த நாடு உனக்குடையது" எனச் சொற்பனத்தில் உத்தரவு கிடைத்ததினால் அவன் நீலகண்டாசிரியர் என்னும் குருவையழைக்க அவர் தமது பத்தினியாகிய அகிலாண்ட வல்லியம்மாளையும் புத்திர புத்திரிகளையும், மருமக்களையும் கூட்டிக்கொண்டு வந்து தனது பரிவாரங்களுடன் கதிரைமலையிற் சேர்ந்தான்.

அக் காலத்தில் இலங்கையின் குடிசனங்கள் யாருமில்லாததனால் விஜயராசன் குடிகளை அழைத்துக் குடியேற்றக் கருதிப் பல முயற்சிகளைச் செய்து பார்த்தான்... குடிகளை வசப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தினால் விஜயராசன் சமயவழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கு இஷ்டம் கொடுத்திருந்தும் தன் சமயாசாரவொழுக்கத்தை தவறாமற் காத்துக் கொண்டான். அரசாட்சியை ஆரம்பிக்கு முன்னமே அவன் தன் அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலுதிக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான்...

வட திசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலை என்னும் பதியிலே, திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவைகளின் சமீபத்திலே கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்து அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாசாரியனின் மூன்றாங் குமாரன் வாமதேவாசிரியர் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பத்தினியாகிய விசாலாட்சி அம்மாளையும் அழைப்பித்து அக்கிராகாரம் முதலிய வசதிகளையுங் கொடுத்து இருத்தி வைத்தான். அக்கோவில் அவ்விடத்தில் தோன்றிய காரணத்தால் அந்தக் கிராமம் கோவிற் கடவை எனப் பெயர் பெற்றது. "முற்காலத்திலே நீகுலமுனியென்னும் ஓர் இருடி அங்குள்ள மலைச்சாரலிலே சில காலந் தங்கியிருந்து அங்குள்ள கீரிமலைத் தீர்த்தமாடி வந்தபொழுது தன் முகத்துக்கிருந்த அங்கவீனம் நீங்கப்போனது கண்டு அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையுங் குறித்து வியப்புற்று அவ்விடமே தனக்குத் தவம் செய்தற்கேற்ற இடமென்று அம்மலை முழைஞ்சிலே வாசஞ்செய்து கொண்டிருந்தார். அம்முனிவனுக்குக் கீரிமுகம் மாறிய காரணத்தால் அம்மலைக்குக் கீரிமலை என்பார்கள். விஜயராசன் அவ்விடத்திற் சிவாலயங் கட்டுவித்த பின் நகுலமுனிவர் அவ்வாலயங்களிற்றங்கிருந்து வழிபாடு பண்ணி வந்தார். அதனால் திருத்தம்ப லேசுவரர் கோவிலை நகுலேசுவரர் கோவிலென்றும் திருத்தம்பலேசுவரியம்மன் கோவிலை நகுலாம்பிகையம்மன் கோவிலென்றும் பெயரிட்டு வழங்கி வந்தார்கள். விஜயராசன் திருப்பணி நிறைவேற்றி முடிந்தபின் பிரயாணப்பட்டுத் தன்னிராச்சியம் முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு கதிரைமலையைச் சேர்ந்தான் (யா.வை.மா.பக்.1-8)

அப்பால் விஜயன் தம்மனா என்னுமிடத்தை இராசதானியாக்கித் தன் மனைவியையும் இரு பிள்ளைகளையும் தள்ளிவிட்டுப் பாண்டிநாட்டுப் பெண்ணொருத்தியை விவாகம் பண்ணிச் சிலவருஷ காலம் அரசாண்டு புத்திரசந்தானமின்றி இறக்க, அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்ப விடாமல் ஒரு வருடம் காப்பாற்றி பின்பு விஜயராசன் சகோதரன் குமாரனாகிய பாண்டுவசு என்பவனை அழைத்து வந்து அரசனாக்கினான்.

இவன் குலத்தில் அரசர் அதன்பின் அனேகந் தலைமுறையாக இவ்விலங்கையை ஆண்டு வந்தார்கள் (யா.வை.மா.பக் 8)

### உக்கிரசிங்கன்

இவன் விஜயராசனின் சகோதரன் பாண்டுவசு என்பவன் மரபைச் சேர்ந்தவன். வைபவமாலை இவனை சாவிவாகன சகாப்தம் 717இல் (கி.பி.795) விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் வடதிசையில் இருந்து வெகு திரளான சேனைகளைக் கொண்டுவந்து பேராடிச் சில தலைமுறையாய் இழந்துபோன இவ்விலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்துக் கதிரைமலையிற் இருந்து அரசாண்டு வந்தான்... தென்னாடுகளை வேற்றரசன் ஆண்டுவந்தான்... இவன் நகுலேசர் கோயிலைத் தரிசித்துக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி முற்காலத்திலே சோழஅரசன் தான் தீர்த்தமாட வந்திறங்கி யிருக்கும் காலத்திலே மாளிகை கட்டுவித்திருந்த வளவர் கோன் பள்ளமென்னும் இடத்திலே பாளயமிட்டிருந்தான் (யா.வை.மா. பக் 13-14)

இங்ஙனம் உக்கிரசிங்கன் வந்திருப்பதை அறிந்த தொண்டை நாட்டை அரசாண்ட தொண்டமான் என்னுமரசன் கேள்விப்பட்டு பரிவாரங்களுடன் கீரிமலைச்சாரலில் வந்தறங்கி இவ்வுக்கிரசிங்கனைச் சந்தித்து இந்தநாட்டில் விளையும் உப்பைத் தனக்கு வருடந்தோறும் விலைக்குத் தரும்படியும் அவ்வுப்பு விளையும் இடங்களுக்குச் சமீபமாகத் தம் மரக்கலங்களைக் கொண்டு போய் உப்பேற்றவும் மாரி காலங்களில் அம்மரக்கலங்களை ஒதுக்கி விட்டு அம் மரக்கலமோட்டிகள் தங்கவும் வசதியாக இருக்கும் பொருட்டு வடகடலில் இருந்து ஓர் ஆறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவு கேட்டான். உக்கிரசிங்க மகாராசன் உத்தரவு கொடுக்கத் தொண்டமான் அங்கிருந்த சிற்றாற்றை மரக்கலங்கள் ஓடத்தக்க ஆழும் விலாசமும் உள்ளதாகவும் ஒதுக்கிடமுள்ளதாகவும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அது முதல் இதுவரைக்கும் அவ்வாறு தொண்டமனாறு என்று அழைக்கப்படுகின்றது.

அப்பால் உக்கிரசிங்க மன்னன் கதிரைமலைக்குத் திரும்பினான். வன்னியர்கள் வந்து தங்கள் வன்னிநாடுகளைத் திறைகொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள் அரசன் தன் இராச்சியமெங்கும் தன்னையே செல்லவும் தனக்கு வரவேண்டிய திறையைக் கோணேசர் கோயிலுக்குக் கொடுக்கவும் உடன்பாடு பண்ணுவித்துக்கொண்டு கதிரைமலைக்குச் சேர்ந்தான். (யா.வை.மா.பக்.13-15)

(தொடரும்)

மூதறிஞர் சொக்கனின் பூதவுடல் நேற்று பிற்பகல் தகனம் செய்யப்பட்டது. ஈழத்தின் மூத்த தமிழ் அறிஞர் கலாநிதி க.சொக் கலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் நேற்றுக் காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அறிஞர்களும் பெரியார்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். கவிஞர் புதுவை ரத்தினதுரை, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், மூத்த அறிஞர் பண்டிதமணி பஞ்சாட்சரம் யாழ்.கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி தனபாலன், விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு உட்பட பலர் அஞ்சலியுரை ஆற்றினர். நாட்டுப்பற்றாளராகக் கௌரவிக்கப்பட்ட சொக்கனின் பூதவுடல் மீது புலிக்கொடி போர்த்தப்பட்டிருப்பதையும், இறுதிக் கிரியைகள் நடைபெறுவதையும், இதில் கலந்துகொண்டவர்களையும், தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் மயானத்திற்கு எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : ஞா.ஜங்கரன்)

## மனோ மாஸ்டரின் நிலை என்ன?

# விபரங்கள் எதுவும் தெரியாது என்கிறது கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

ஈ.என்.டி.எல்.எவ். செயலாளர் மனோ மாஸ்டர் (பாக்கிய நாதன் ராஜரட்ணம்) புலிகளின் பிடியில் உள்ளாரா? இல்லையா? என்பது தமக்குத் தெரியாது என கண்காணிப்புக் குழுவின் முக்கியஸ்தர் ருவான விங்கெல் கடந்த வாரம் தெரிவித்துள்ளார்.

மனோமாஸ்டர் காணமால் போய்விட்டதாக ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் தலைவர் குணசேகரன் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்திருந்ததுடன், அவரைக் கண்டு பிடித்துத்தருமாறும் கேட்டிருந்தார். இது தொடர்பாக புலிகளிட மிருந்தும் தகவல்கள் பெறவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் கண்காணிப்புக்குழு இது தொடர்பில் தமக்கு ஒரு வித முறைப்பாடும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து விட்டது. ஆயினும், இம்முறைப்பாடு டிசம்பர் 1இல் எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

ஆனால் பின்னர் கண்காணிப்புக் குழுவினர் முறைப்பாடுகிடைத்ததை உறுதி செய்தனர். ஆனால் அவர் கடத்தப்பட்டாரா என்பது பற்றி தெரியாது. ஆனால் தமிழ் நாட்டில் இருந்து எமக்கு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த மாதம் 4ஆம் திகதி மனோ மாஸ்ரர் கண்காணிப்புக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில்,

தனது தாய் யாழ்ப்பாணத்தில் வசிப்பதாகவும், அவருக்கு பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ள தாகத் தெரியவருகிறது. (ற-6)

பகைஎன்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று - குறள்

வலம்புரி

## வானூர்திச் சேவை ரத்து பாதகமான விளைவையே தரும்

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் பேச்சுக்களைத் தொடர்வதற்கும் வசதியாக விடுதலைப் புலிகளுக்கு அரசினால் வானூர்திச் சேவை வழங்கப்பட்டது. இதன் மூலம் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளுக்குச் சென்று இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் பற்றி ஆராய்வதீற்கும் வெளிநாடுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கும் வாய்ப்பாக இருந்தது.

இவ்வாறு அரசினால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட வானூர்திச் சேவையானது சமாதானத்தின் கரங்களை மேலும் வலுப்படுத்துவதாக இருந்தது.

எனினும், ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுக்கு வழங்கி வந்த வானூர்திச் சேவையை ஜே.வி.பி. கடுமையாக எதிர்த்து வந்ததும் தெரிந்த விடயமே.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வேறு வடிவம் கொடுத்தது. அரசு தனிநாட்டை புலிகளிடம் கையளிக்கின்றதெனப் பிரசாரம் செய்தது.

அந்தப் பிரசாரத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைப்புச் செய்தார். அதுமட்டுமன்றி சமாதானச் சூழ்நிலையை சீர்குலைக்கும் வகையில் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட வானூர்திச் சேவையை கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து ஆட்சிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுக்கான வானூர்திச் சேவையை தடை செய்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என பிரசாரம் செய்த ஜனாதிபதி சமாதான விரோத சக்தியான ஜே.வி.பியுடன் இணைந்துகொண்டதன் மூலம் அவரின் கபட நோக்கம் உணரப்பட்டிருக்கவேண்டும்.

சமாதான முயற்சியைக் குழப்பாத வகையில் ஜே.வி.பியை பார்த்துக் கொள்வேன் என உறுதி கூறிய ஜனாதிபதி இன்று ஜே.வி.பியின் கட்டளைக்கும் உத்தரவிற்கும் கட்டுப்பட்டு நடந்து கொள்கின்றார் என்பதை வெளிப்படுத்துவதாக விடுதலைப் புலிகளுக்கான வானூர்திச் சேவை நிறுத்தம் அமைந்துள்ளது.

அரசின் இத்தகைய நடவடிக்கையை நோக்கும் போது அது விடுதலைப் புலிகளை சினங்கொள்ள வைக்கும் நடவடிக்கையாகவே உணரப்படவேண்டியுள்ளது.

இலங்கை அரசின் விமான சேவையில் பயணிக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இம்மியும் கிடையாது. அதேபோல் அரச விமான சேவையில் பயணிக்க வேண்டும் என அவர்கள் விரும்பியது மில்லை.

சுருங்கக் கூறின் விடுதலைப் புலிகள் அரச விமானத்தில் பயணிக்கிறார்கள் எனில் அதனையிட்டு மகிழ்வடையவேண்டியவர்கள் அரச தரப்பினரே. சமாதான முயற்சியில் நம்பிக்கையும், விருப்பும் கொண்டதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் அரச விமானப் பயணத்தை ஏற்றுக்கொண்டார்கள். இந்த உண்மையை ஜே.வி.பி. போன்ற சமாதான விரோத சக்திகள் புரிந்து கொள்வது கடினமே.

விடுதலைப் புலிகளுக்கான வானூர்திச் சேவையை நிறுத்திக்கொள்ளும் அரசும், ஜனாதிபதியும் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும். அது எதுவெனில் இலங்கை அரசின் விமானங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பறக்க வேண்டுமெனில் அதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி தேவையென்பதே ஆகும்.

இந்த உண்மையை மறந்துள்ள அரசு தனது உளனாய்வுத்துறையின் ஊடாக அறிந்து கொண்ட மற்றுமோர் உண்மையும் மறந்துபோனமை துரதிஷ்டமானதாகும். அதாவது விடுதலைப் புலிகள் தமக்கென ஓர் விமானத் தளத்தையும், விமானத்தையும் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை இலங்கை விமானப்படைத் தளபதி வெளிப்படையாக அறிந்திருந்தும், அரசு அதனை மறந்து செயற்படுகின்றது.

எதுவாயினும், விடுதலைப் புலிகளுக்கான வானூர்திச் சேவையை அரசு தடைசெய்திருப்பது சமாதான சூழ்நிலையைப் பாதிக்காமல் இருக்க வேண்டுமாயின் விடுதலைப் புலிகளின் விமானப் பறப்பிற்கு அரசு அனுமதியளிப்பதே ஒரே வழியாகும்.

# இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் உடன் பேச்சை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குக!

## வட-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்படுத்தி வடககு- கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்டுமாறு வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் சி.சசிக்குமார் ஆகியோர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளார்கள்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த கால யுத்தத்தினால் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் குண்டுவீச்சுக்களினால் முற்றாக சேதமடைந்ததுடன், பாதிப்புமடைந்தன.

ஆயிரக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் இதனால் பாதிக்கப்பட்டும் உயிரிழந்தும் போனதோடு பலர் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டனர். இந்த யுத்தத்தினால் மாணவர்கள், ஆசிரியர்கள் பயப்பீதியுடனும், மன அழுத்தத்திற்கு மத்தியிலும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இதனால் அவர்கள் மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். இதன் விளைவாக வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை மிகவும் பின் தள்ளப் பட்டிருந்தது.

இவ்வாறு யுத்தத்தினால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஆசிரியாகள, மாணவர்களுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டதை தாங்கள் நன்கறிவீர்கள்.

அதன் பின்னர் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமே இப்பொழுது இப்பகுதி மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டு தமது கற்றல், கற்பித்தல் நடவடிகைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். சேதமாக்கப்பட்ட பாடசாலைகளும் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன.

படை முகாம்கள் இருந்த பாடசாலைகளில் சில விடுவிக்கப்பட்டு பாடசாலை இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்கள், மாணவர்களின் நிலை மீண்டும் சொல்ல முடியாத துயரங்களைத் தாங்க வேண்டியேற்படுவதோடு, கல்வி மிகவும் பின்தங்கிய நிலைக்கு சென்றுவிடும். இவ்வாறான நிலை வடக்கு- கிழக்கு மாகாண தமிழ் மணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமல்லாது இப் பகுதியில கடமையாற்றுகின்ற, கல்வி கற்கின்ற முஸ்லிம், சிங்கள ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் ஏற்படும்.

இதனால் முழு வடக்கு-கிழக்கு மாகாணமுமே கல்வியில் பின்தள்ளப்படும். இவ்வாறான பாரிய பின் விளைவுகளை கவனத்தில் எடுத்து தற்போது ஏற்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பத்தை தவறவிடாது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை அடிப்படையில் பேச்சுவார்தையை ஆரம்பிப் பதற்குாிய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி தங்களை வடக்கு -கிழக்கு மாகாணத்தில் கடமை புரியும் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரிர்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இவ்வாறு செய்வதன் மூலமே விடுதலைப் புலிகளையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரமுடியும். இதன்மூலம் தொடர்ந்து சமாதானம் ஏற்பட்டு நிரந்தர தீர்வுக்கும் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகி ஒரே நாட்டினுள தீர்வு எட்டப்பட்டு இலங்கை சுபீட்சமடையும்.

எனவே இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் நாட்டில் வாழுகின்ற தமிழ், சிங்கள், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தங்களது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி துணிசலான முடிவினை காலதாமதமின்றி எடுத்து சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை சுபீட்சமான பாதைக்கு இட்டுச் செல்லும்படி தங்களை வடக்கு- கிழக்கு மாகாண பொது அசிரியர் சங்கத்தின் சார்பில் வேண்டுகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# நீதிபதி கொலைச் சூத்திரதாரி நௌபர் வைக்கப்பட்டுள்ள சிறை குறித்து சர்ச்சை

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவருடைய மெய்ப்பாதுகாவலா ஆகியோரின் படுகொலைச் சூத்திரதாரி என்று சொல்லப்படும் சந்தேகநபர்களில் ஒருவரான எம்.என்.நௌபா எந்த விளக்கமறியல்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளியன்று கேள்வியெழுப்பப்பட்டது.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவாகளின் குடும்பத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இக் கேள்வியை எழுப்பி கொழும்பு பிரதான நீதிவான் சரோஜினி குசல வீரவாத்தனவிடம் அதற்கான பதிலை எதிாபாத்தா.

சந்தேக நபரான எம்.என்.நௌபரை களுத்துறை சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் நௌபர் கொழும்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று அறிகிறோம் என்றும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

நௌபா எங்கே உள்ளார்? என்பதை நீதிமன்றம் அறிந்து எமக்கு இது குறித்து தொவிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இந்தக் கோரிக்கையை கவனமாக செவிமடுத்த நீதிவான் சிறைச்சாலைக்கு விஜயம் செய்வதன் மூலம் உண்மை நிலையை அறிந்து பின்னர் தொியப்படுத்துவதாகவும் உாிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பதிலளித்தார்.

இதேவேளை, இந்தக் கொலை வழக்கின் சந்தேகநபர்களான ஆறு பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் சரோஜினி குசலவீரவர்த்தன உத்தரவிட்டார்.

இவ் விசாரணை நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன முன்னிலையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றபோது சந்தேக நபாகள் ஆறு பேரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமனறில் ஆஜராக்கப்படவில்லை. அத்துடன் சந்தேக நபாகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகியிருக்கவும் இல்லை. கொழும்பு குற்றத்தடுப்புப் பிாிவுப் பொலிஸாா இவ்விரட்டைக் கொலை சம்பவம் தொடாபில் மேலதிக அறிக்கையொன்றை நீதிவான் முன்னிலையில் சமர்ப்பித்தனர். (ற-4)

# அநுராவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குக!

## ஜோன்ஸன் பெர்னாண்டோ நீதிமன்றில் முறைப்பாடு

(கொழும்பு)

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட எம்.பியும் முன்னாள அமைச்சருமான ஜோன்ஸன் பெர்னாண்டோ கடந்த வெள்ளிக்கிழமை மேல் நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் பிரதிகள் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா, மேல் நீதிமன்றத்தின் சகல நீதிபதிகள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் பொலநறுவையில் கூட்டமொன்றில் அநுரா பண்டாரநாயக்க, எஸ்.பி.திஸநாயக்கவை சிறைக்கு அனுப்பவேண்டும். அவர் வருடப்பிறப்பை வெலிக்கடையில் கொண்டாட வேண்டும் எனப் பேசியிருந்தார்.

இப்பேச்சானது, நீதித்துறையின் தொழிற்பாட்டினை இடையூறு செய்வதாகும். மேலும் எஸ்.பி.திஸநாயக்கவை சிறைக்கு அனுப்புவது தொடர்பாக அவர் முன்னரே தெரிந்து வைத்துள்ளார். பல ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.க்கள் மீது வழக்கு தொடருவது பற்றி இவர் தெரிந்து வைத்திருந்தது எவ்வாறு? என விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இவா தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் பாரதூரமான விடயம். நீதித்துறையில் தலையீடு செய்வது தவறான விடயம். இவற்றின் மூலம் நீதித் துறை மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையனம் ஏற்படும்.

எனவே இதுதொடர்பில் அநுரா பண்டாநாயக்க மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என ஜோன்ஸன் பெர்னாண்டோ நீதிமன்றை மேலும் கேட்டுள்ளார். (ற-6)

## கோப்பாய் வைத்தியசாலையில் தடுப்பூசி மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கல்வியங்காடு)

கோபபாய் அரசினர் வைத்தியசாலையில் நோய்த்தடுப்பூசி மருந்து முடிவடைந்ததனால் மக்கள் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாவதைக் காண முடிகிறது. "கோட்டா" முறையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்ற தடுப்பூசி மருந்துகள் முடிவடைந்ததாலே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இத் தடுப்பூசியை ஏற்ற வேண்டிய நோயாளார்கள் தனியார் மருந்தகங்களில் மருந்து வாங்கி ஏற்றுகின்ற சூழ் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான நிலையில், நோயை அறிவதற்கு மட்டும் நோயாளர் தங்கள் இயலாமையையும் பொருட்படுத்தாது வைத்தியரை நாடவேண்டிய நிலை உள்ளது.தனியார் மருந்தக தடுப்பூசிகளை ஏற்றுவதால் வேறு நோய்கள் ஏற்படக்கூடுமென்ற தூர அபிப்பிராயமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. (ப-74)

ஓம்
திசைரி தியானம்
விவேகச் சிந்தனைகள்
சுற்றியுள்ள இயற்கை நம்மை அழுத்தி வைக்க முயல்கிறது. அதை மீறி ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இயற்கையுடனான போராட்டம் தொடர்ந்த வண்ணமே உள்ளது. சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தில் எத்தனையோ பொருட்கள் நசுக்கப்படும். அதுதான் உங்கள் உண்மைத் துன்பம்.
சுவாமி விவேகானந்தர்

# சொக்கனின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமம்

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், நாட்டுப்பற்றாளருமான சொக்கனின் பூதவுடல் நேற்றுமாலை தகனம் செய்யப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி காலமான சொக்கனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று அஞ்சலி நிகழ்வுகள் ஆசிரியர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி உரையினை வைத்தியக் கலாநிதி சிவஞானசுந்தரம், பேராயர் ஜெபநேசன் அடிகளார், மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா, கவிஞர் புதுவை இரத்தினதுரை, தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த அருண் மாஸ்ரர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவி பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாம வலயக் கல்விப் பணிப் பாளர் றெஜினா இருதயநாதன், யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி தனபாலன், அகில இலங்கை கம்பன் கழகத்தின் சார்பில் த.ஜெயசீலன், வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைச் செயலாளர் பஞ்சலிங்கம், ஆசிரியமணி பஞ்சாட்சரம், ஆவரங்கால் மக்கள் சார்பாக கிருஸ்ணராசா, நயினைக் கிருபானந்தா ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

சொக்கனின் இறுதி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அவரது பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ச-19)

# கலைத்துறைக்கு அதிகளவு மாணவர்கள் அனுமதி

2004 - 2005 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கென தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விபரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

ஆகக்கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் கலைப்பீடத்திற்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர். அந்த வகையில் 3 ஆயிரத்து 307 மாணவர்கள் கலைப்பீடத்திற்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

முகாமைத்துவத்துறைக்கு 2 ஆயிரத்து 189 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்துறைக்கு ஆயிரத்து 507 மாணவர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

மற்றும் பொறியியல் பீடத்திற்கு ஆயிரத்து 35 மாணவர்களும், மருத்துவத்துறைக்கு 894 மாணவர்களும், உளவியல் விஞ்ஞானப் பிரிவுக்கு 920 மாணவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.(ச-5,9)

# குருநகர் - திருநகர் மக்களுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர், திருநகர் பகுதி மக்களிடையே இடம்பெற்ற முரண்பாட்டை முடிவுக்குக்கொண்டுவரும் முகமாக நேற்று யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருமுதல்வரின் தலைமையில் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட மனித முன்னேற்றநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார், பங்குக் குருக்கள், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். பிரதேச கடற்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் தென்றல் மாறன் மற்றும் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது மக்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அனுராவுக்கு எதிராக ஐ.தே.க.மனுத்தாக்கல்

நீதிமன்றத்தை அவமதித்ததாகத் தெரிவித்து அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவிற்கு எதிராக ஐ.தே.க.வின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னான்டோ நேற்று உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி பொலன்னறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் அனுரா பண்டாரநாயக்கா ஆற்றிய உரையை மேற்கோள் காட்டி இந்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார்.

எதிர்வரும் புதுவருட தினமன்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்கா வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதியாக இருப்பார் என அனுரா பண்டாரநாயக்கா ஆற்றிய உரை உயர் நீதிமன்றத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவை ஏற்றுள்ள நீதிமன்றப் பதிவாளர், பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வா தற்போது நாட்டில் இல்லாத காரணத்தினால் அவர் நாடு திரும்பிய பின்பு அவரது பரிசீலனைக்கு முன்வைக்கப் படும் என தெரிவித்துள்ளார். (ச)

# கிழக்கு மாகாணத்தில் பெருவெள்ளம்; 7 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

## ஒரு லட்சம்பேர் பாதிப்பு

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு நாட்களாகப் பெய்துவரும் கடும்மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்குள் சுமார் ஏழாயிரம் குடும்பங்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறி உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் மற்றும் பாடசாலைகள், ஆலயங்கள் உட்படப் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த வெள்ளம் காரணமாக சில கிராமங்களுக்கான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் அக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று ஆரம்பமான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

வீதிகளில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துக்கள் சில இடங்களில் தடைப்பட்டுப்போயுள்ளதோடு சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பெரும்போக வேளாண்மை செய்கைக்கான பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் வேல்முருகு சண்முகம் தெரிவித்துள்ளார்.

வெல்லாவெளி, பட்டிப்பளை, கிரான் ஆகிய பிரதேசங்களில் 10 இற்கும் மேற்பட்ட கிராமங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரம் குடும்பங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறியிருக்கின்றன. 300 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமூக சேவைகள் அமைச்சைப் பணித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அமிர்அலி வாழைச்சேனைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை, திருகோணமலையில் பெய்துவரும் கடும்மழை காரணமாக 25 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ச-4)

# 64 ஈழ அகதிகள் நாடு திரும்பினர்

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 64 ஈழத் தமிழ் அகதிகள் விமானம் மூலம் நேற்று நாடு திரும்பியுள்ளார்கள். யு.என்.எச்.சி.ஆர். ஏற்பாட்டில் நாடு திரும்பிய இந்த அகதிகள் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ச)

# குடாநாட்டில் மழை நீடிக்குமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்றுப் பெய்த கடும்மழை காரணமாக தாழ்ந்த பகுதிகளில் வசித்துவரும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சில பிரதேசங்களிலுள்ள குடிசை வீடுகளில் வசித்துவந்த மக்கள் இடம்பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இம்மழை இன்னும் ஒருசில நாட்களுக்கு பெய்யக்கூடும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சுத்திகரிப்புத்..

இதேவேளை போராட்டம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டதுடன் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தமது பணியை மேற்கொண்டனர். குருநகர், திருநகர் பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களை அடுத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கடந்த 29 ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் மறியல்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# விமானப் பறப்புக்கு...

தரிப்பதற்கான விசாலமான கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 250 மீற்றர் நீளமான இந்த விமான ஓடுபாதைக்கு அண்மையில் உள்ள மரங்கள் விமானம் வந்து இறங்க வசதியாக வெட்டி அகற்றப்பட்டுள்ளன. மின் விளக்குகள் பொருத்தப்பட்டு அனைத்து வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது விமானங்களைப் பயன்படுத்தப் புலிகள் தயாராகிவருகிறார்கள் என்பது தற்போது நூறு வீதம் ஊர்ஜிதமாகிவிட்டது. அத்துடன் நவீனரக ராடர் கருவிகள் நம்மிடம் இல்லாததால் வான் புலிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச் சமாளிக்கமுடியாது என்று புலனாய்வுப் பிரிவு அரசிடம் தெரிவித்திருக்கிறது.

இதனால் சீற்றமடைந்த அரசு சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வான்புலிகள் விவகாரத்தைச் சுட்டிக்காட்டி நோர்வேக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் காட்டமான கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் தமது வானூர்திகளுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை புலிகளிடமிருந்து எழுத்துமூலம் கண்காணிப்புக்குழு பெற்றுத்தரும்வரை தாம் புலிகளின் பிரதேசத்தினுள் பறப்புக்களை மேற்கொள்ளப் போவதில்லை என்ற நிபந்தனையுடனேயே அமைதி முயற்சிகளுக்கு அனுசரணையாக இதுவரை காலமும் இராஜதந்திரிகளுக்கு விமானப்படை வழங்கிவந்த விமான சேவையை நிறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. (த)

# அன்ரனோவ்...

கள் அனுமதிக்கவில்லை.

இத் தகவல் அரசை எட்டியதை அடுத்து, சுமார் 20 மணி நேரமாக விமானத்துக்குள்ளேயே இருந்தவர்களை விடுவித்து விமானங்களை மீட்பதற்கு உரிய நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டது. விமானங்களைச் சீரசெய்த பின்னர் அங்கிருந்து உரிய ஆவணங்கள் எதுவுமின்றி பறப்பை மேற்கொண்டமை தொடர்பாக விமானப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த)

# யாழ். செயலகம் முன் நேற்றும் மறியற் போர்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடிமர்ந்து அரச உதவிகள் எதுவும் கிடைக்காத தென்மராட்சி, வரணிப் பகுதி மக்கள் நேற்று யாழ். செயலகத்தின் முன் பாகத் திடீர் மறியற் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

தென்மராட்சியின் வரணிப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இம்மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான மீளக்குடியமர்வு கொடுப்பனவு இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை எனவும் அக் கொடுப்பனவு ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆண்டுகள் பல கடந்துள்ளது. எனினும், கொடுப்பனவுகள் எவையும் கிடைக்கவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்டோர் யாழ். செயலக பணியாளர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் மேலதிகப் பொலிஸாரும் படையினரும் அங்கு குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அங்கு வருகை தந்த யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து 11 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை கடந்த வியாழக்கிழமையிலும் மீள்குடியமர்வு கொடுப்பனவை வழங்கக்கோரி மறியற் போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-04)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.